ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 6—10—46 | இதழ் 23

## ★ ரங்கோன் ராதா ★

சேளமியன்.

கதவைத் தாளிடாமல்படுத்துக்கொண்டேன். தூக்கம்வரவில்லை; அவரும் உள்ளேவரவில்லை; கூடத்திலே, படுத்துக்கொண்டார்; குறட்டைவிடும் சத்தம் கேட்டது; எனக்குப்பிரமாதமானகோபம்; என்னசெய்வது? உன் அப்பா, என்ன காரணத்தாலோ, ஒருவார்த்தைபேசவில்லை; வம்புக்குத்தயாராகநான் இருந்து பயன் இல்லாமற்போய்விட்டது. என்மனதிலே இருந்த கொதிப்பை வெளிப்படுத்த வழி கிடைக்காமல் திண்டாடினேன். அந்தச்சமயத்திலே, எனக்குத் துளசிமீது சென்றது நினைவெல்லாம். அவள்மட்டும் எனக்குத் துணையாக இருந்தால், எவ்வளவோ நிம்மதியாக இருக்குமே என்று எண்ணினேன். அந்தக் கிராமத்திலே, எனக்கு நாள் போவதே தெரியாமல், அவ்வளவு இனிமையாகப் பேசிக்கொண்டிருப்பாள். அவள் இப்போது இருந்தால், கோபம், சோகம்எல்லாவற்றையும்விரட்டி அடிப்பாள். ஏன்! என்புருஷருக்குக்கூடப்புத்தி புகட்டக்கூடியவள் துளசி. கேலியாகப்பேசியே சித்திரவதை செய்துவிடுவாள். அவளோ புருஷனிடம் வாழ்க்கைப்பட்டுக் கிராமத்தில் இருந்தாள், நானோ, புதுமாப்பிள்ளையாகவேண்டுமென்று திட்டமிட்டுவேலைசெய்யும் புருஷனோடு சச்சரவுசெய்துகொள்ளக்கூடச் சௌகரியம்கிடைக்காமல், படுத்துப்புரண்டு கொண்டிருந்தேன்.

ஒரு சமயம், கடையிலே அவருக்கு ஏதேனும் விசாரம் தரக்கூடிய சம்பவம்நடந்ததோ—அதனால்தான் வாய்திறவாமல் படுத்துக்கொண்டாரோ என்று யோசித்தேன். ஒருவேளை, வேலை அதிகமோ, அலுப்பினால் அயர்ந்து தூங்குகிறாரோ என்றும் நினைத்தேன். சரி! எந்தக் காரணத்தாலே தூங்கினாலும் என்ன, தூக்கம்மேலிட்டிருக்கும்போது சந்தடிசெய்தால்சாதுவுக்குக்கூட அல்லவா கோபம் பிரமாதமாக வரும், அவரோ அலுத்துத்தூங்கிக்கொண்டிருக்கிறார், அவருடைய தூக்கத்தைக் கெடுத்துப் பார்ப்போம்; கோபித்துச்சண்டைக்கு வருவார், பதிலுக்குப் பதில், வட்டியும் சேர்த்துத் தருவது என்று எண்ணினேன். உடனே, என்னகாரியம் செய்தால், அவருக்குத்தூக்கம்கெடும் என்ற யோசனை. துளசி இருந்திருந்தால் கதை சொல்லச் சொல்லலாம், எதையாவது புத்தகம் படிக்கச் சொல்லலாம், இடையிடையே, அவளுடன் உரத்தகுரலிலேபேசிசிரிக்கலாம், அந்தச்சிரிப்பும் பேச்சும், அவருடையதூக்கத்தைக் கெடுக்கும், கோபம் பிறக்கும். துளசி இல்லையே! வேலைக்காரி இருந்தாள். அவளிடம் நான் அதிகமாகக் கூடப்பேசுவது கிடையாது. அவள் கதை சொல்லத் தெரிந்தவளோ இல்லையோ என்று சந்தேகம். சரி! எதற்கும் அவளை எழுப்பிக்கதை சொல்லச்சொல்வது, தெரியாது என்றால், நான் சொல்கிறேன் கேளடி என்று நாமே கதை சொல்வது என்று தீர்மானித்தேன். அவள் கொஞ்சத்தில் எழுந்திருக்கவில்லை. எழுந்துமட்டும் என்ன பலன்—நான் நினைத்தபடிதான் இருந்தது. கதையா? தெரியாதே! என்றாள்.

"தூக்கமே வரவில்லையடி"

"மத்தியானம் தூங்கினீர்களே அதனாலே..............."

"ஏன் தூக்கம்வரவில்லைஎன்று உன்னைக்கேட்டேன்? தூக்கம் வரவில்லை, என்ன செய்வது இப்போது?"

"படுத்துக்கொண்டு சும்மா கண்ணை மூடிக்கொண்டிருந்தா, தூக்கம் கொஞ்ச நேரத்திலே தன்னாலே வந்துவிடும்"

"போடி மூதேவி!"

"ஏதாவது ஒருகதை சொல்லடி, கேட்டுக்கொண்டே இருந்தாத்தூக்கம் வந்துவிடும்"

"எனக்கென்ன கதை தெரியுங்க? முன்னமேயே சொன்னேனுங்களே, கதை தெரியாதன்னு"

"போடி புளுகி, இவ்வளவு பெரியபொம்பளைக்குக் கதையா தெரியாது."

"நீங்க ஒருவேடிக்கை, ஏதாவதுகதை சொல்றதுதான், கேட்கறதுதான், அதெல்லாம் இப்போ கவனமா இருக்கும். இப்ப என் சமாசாரமே பெரியகதை. நான் வாழ்ந்த கதையும்வதைகிறகதையும், அந்தப்பாவி என்னைத்தொட்டுத்தாலிகட்டினகதையும், மொந்தைக்குடியனாகி, என் கால் கொலுசு, கம்மல், அட்டிகை, காப்பு, எல்லாவற்றையும் கடன்காரன்கிட்ட அழுதகதையும், இதுதான் இப்ப எனக்குத் தெரிஞ்ச கதை"

'அழுமூஞ்சி! அழுமூஞ்சிடி நீ! போகட்டும். உன்கலியாணக் கதையைச்சொல்லுகேட்கலாம்'

"நீங்க ஒரு வேடிக்கை. நான் என்ன தொரோபதையா, சீதையா, என் கலியாணத்துக்கு ஒரு கதை இருக்க. பொறந்தேன் பொம்பளையா, வளர்ந்தேன், வயசு வந்துது, ஒருத்தன்கிட்ட பிடிச்சுக்கொடுத்தான் எங்க அப்பன். தாலிகட்டின அண்ணைக்கு மறுநாளே அவன் ஆரம்பிச்சிவிட்டான் அதிகாரம்பண்ண, கின்னு உதை; குடிஞ்சாகுத்து இவ்வளவு தான்கதையே. பொம்பளேகதை இவ்வளவுதானேம்மா இருக்கும். அதிலேயும் ஏழைகவீட்டுக்கதை, ராஜாகதையாட்டமாவா இருக்கும்! எனக்கென்ன சொயவரம் நடந்துதா, கதை இருக்க"

"போடிதிருடி, கதையேதெரியாதன்னு சொன்னயே. இப்ப நீ பேசறதே கதை சொல்றமாதிரியாத்தான் இருக்கு. கிடக்கட்டும். உன்னை, உங்க அப்பா, கலியாணம் செய்து கொடுக்கறப்போ, உன்னைக்கேட்டாரா?"

"என்னையா? என்னை என் கேட்கவேணும்? இது என்ன வழக்கம்? அவரே பார்த்தாரு எனக்குவயசாயிடிச்சு; அவ்வளவு தானே, யாரையோ புடிச்சாரு, ஐயரை நாள் கேட்டாரு, கலியாணத்தை முடிச்சாரு, அவ்வளவுதான். வேறே என்னைஎன்ன கேட்டாரு! எந்தப்பொண்ணைத்தான் அவங்க அப்பா கேட்டாரு. அப்பேர்ப்பட்ட சீதையைக்கூட, நீ இராமனைக்கலியாணம்செய்துக்க இஷ்டந்தானான்னு அவங்க அப்பா கேக்கலியே. அந்தம்மா புண்யவதி ஆகையாலே, அவங்களுக்குத்தக்கமாதிரியாப் புருஷன் வந்தாரு. பொம்பளைங்க விஷயம், தாயம் போடறமாதிரியாகத் தானேம்மா."

இப்படி, நானாக அவளிடம், பேசிப் பேசிக்கிளறியும் பார்த்தேன்; பலன் இல்லை; அவளிடம் அந்தப்பேச்சுப்பேசும் போதேகூட, உரக்கப்பேசியும் இடையிடையே பலமாகச்சிரித்தும் பார்த்தேன், அவருடைய தூக்கம் அதனால் கெடட்டும்என்பதற்காக; அதுவும் பயன்தரவில்லை; அவருடைய குறட்டைச் சத்தம் அதிகரித்தது, குறையவில்லை. நெடுநேரத்துக்குப்பிறகு, வேலைக்காரி, தானாக, ஒருகதை நீங்கதான் சொல்லுங்களேன் என்றாள். எஜமானியைக் கதை சொல்லும்படிக் கேட்பது மரியாதை அல்ல, என்ற எண்ணிக்கொண்டிருந்தாள் போலிருக்கிறது. நான் வேண்டுமென்றே கதைகட்டிச் சொன்னேன்; பெண்ணைக்கொடுமை செய்யும் ஆணைப்பற்றி; அந்த ஆடவன் பிறகுபலமாதிரியான கஷ்டங்களை அனுபவித்து, பலரால் இம்சிக்கப்பட்டு, கடைசியில் எந்த மனைவியை இம்சித்தானோஅவளு



சம்பத்—சுலோச்சனா

(7-ம் பக்கம் பார்க்க)

# "திரை" நீக்கப்படவேண்டும்!

இடையே ஓர்திரை! இருபுறமும் இருசக்திகள்—ஒன்றுகவிதா சக்தி, மற்றொன்று காதல்சக்தி!

"அருங்கவிவாணனும் இவன், அந்தகனானது கொடுமையன்றோ!" என்று அணங்கு கவலைப்படுகிறாள்.

"அரசகுமாரிக்கு அனுவளவேனும்உளமகிழ்ச்சிஉண்டோ! எங்ஙனம் இருத்தல் முடியும்? பெருநோயன்றோ பாவையைப் பிடித்திருக்கிறது" என்று கவி கவலையுற்றான்.

திரைபேசுமோ? ஒருபுறம், அறிவுக்கண்போலவேஒளிவிட்டு விளங்கும் கண்ணுடையான் — மறுபக்கம் மாற்றுக்குறையாத பசும்பொன் மேனியள்—மாசற்றஉடல், மனமும் தூய்மைக்கு அகம்! எனினும் அவள்அவனைக் குருடனென்றும், அவன் அவளைப் பெருநோய் கொண்டவளென்றும் எண்ணினர். காதல் சக்தியால் மோதல் நேருமோ என்று ஐயம் கொண்ட அரசன், அவ்விதம்அறிவித்தான், இருவரையும்ஏய்த்தான்.

திரை இடையே! எனவே குறைஇல்லை இருவரிடமும் என்பதை இருவரும் உணரமுடியவில்லை.

அந்த நிலவுகண்டு அவன்—பாடினான் அவளில்லாச்சமயம்—அவன் அறியாதுஅவள் வந்தாள் கவிதையைக் கேட்டாள்.

"சொக்க வெள்ளிப் பாற்குடமோ முழுநிலவே!" என்று கவிகூறினான்— கன்னி வியப்புற்றாள். விழியற்றவனாயிற்றே, எங்ஙனம் நிலவைக்கண்டு பாடுகிறான் என்று.

மதிகண்டு அவன் மதுரக்கவி பொழிகிறான் — மங்கை உருகினாள்—உளத்திலே நொடியிலே ஓர் எண்ணம் கொண்டாள்—இடையே இருந்த "திரை"யை இழுத்து எறிந்தாள். அவன் அந்தகன்அல்ல! அவள் பெருநோய் கொண்டவளுமல்ல!

ஆச்சரியம்—ஆனந்தம்—அணைதல்—பிறகு முறைப்படி.

புரட்சிக்கவிஞரின் பொன் எழுத்தில் வெளிவந்த இக்கவிதையை அறிவர் தமிழர். 'திரை' நீக்கப்பட்டதும், முன்பு இருவரும் கொண்டிருந்த எண்ணம் தவறு என்பதைக் கண்டனர்—களித்தனர்.

'திரை' காதலருக்குஇடையே மட்டுமல்ல, கட்சிகளுக்கிடையேயும் இருக்கிறது. கண்ணுள்ளவனைக் குருடனெனக் காரிகை கருதவும், பொன்அவிர் மேனியளைத் தொழுநோயள் என்று காளை கருதவும், திரை காரணமானது போலவே, ஒருகட்சியினரைமறு கட்சியினர், அவர் அடிமை—தாசன், சுயநலக்காரியப்புலி— என்று எண்ணவும், பேசவும்—தூற்றவும், நிலைபிறக்கிறது—இதனால் பிளவும் கசப்பும் வளருகிறது.

திரை நீக்கப்பட வேண்டும், ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ள—இடையே வேறொருவர், இருசாராரிடையேயும், இல்லாததும் பொல்லாததும் கூறி வம்பு உண்டாக்காதிருக்க.

"திரை" இருந்த காரணத்தாலேயே, சுலபத்தில் தீர்த்துக் கொள்ளக்கூடிய பிரச்னைகள் கூடக் கடினமாகி விட்டன—மூலையில் கிள்ளி எறிந்திருக்க வேண்டியவை, கோடரிகேட்கின்றன, ஒருமித்த கருத்துடன் பேசக்கூடிய பிரச்னைகள்கூடப் போர்முகமுக்கு இழுத்துவிடப் படுகின்றன. "உண்மையாகவா! என் சார்! நிஜமாகவா, வெள்ளைக்காரனைநம்பமுடியாது என்று அவன் சொன்னான்." "என்ன ஆச்சரியம் சார்! அவன் சர்க்கார் தாசனாச்சே, அவனா அப்படிச் சொன்னான்"—இது திரைக்குஒருபுறமிருக்கும் காங்கிரஸ் காரரின் கருத்து, மறுபுறம் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியாரைப் பற்றி. அவரோ, எதிர்ப்புறம் இருக்கும் காங்கிரஸ் காரர் "ஆரியதாசர்" என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்; ஆகவே "உயர்ந்தஜாதி தாழ்ந்த ஜாதி என்று பேசிப் பேசித் தானய்யா நாடுகுட்டிச் சுவராயிற்று" என்று காங்கிரஸ் காரர் பேசினார், என்று கேள்விப்பட்டதும், "அப்படியா பேசினார்! ஆச்சரியமாக இருக்கே!" என்று கூறுகிறார்.

இடையே உள்ள திரையே, இருவருக்கும் இருவகையான தவறான எண்ணங்கள் பிறக்க, வளரக்காரணமாயிற்று.

இந்தத்திரை நீக்கப்படவேண்டும்—பிரச்னைகள் தீர்க்கப்பட்டு நாட்டு மக்களின் கூட்டுச் சக்தி பயனளிக்கும் பணிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.

அதற்கேற்ற வேலை இது. அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியாகவேண்டும்.

'திரை' இருந்து வருவதன் காரணமாகச்சிக்கலுக்குக் காரணமே அல்லாத எவ்வளவோ விஷயங்கள், சிக்குலைக்கப்பட்டுப் போயின. இன்றும் அந்த நிலையிலே, போற்றத்தக்க மாறுதல் காணோம்—ஆனால் மாறுதல் ஏற்படும் என்பதற்கு, அறிகுறிகள் தோன்றியுள்ளன.

'திரை' செய்திருக்கும் காரியத்துக்கு ஒருஎடுத்துக்காட்டு.

காங்கிரசில் இருப்பவரும் தமிழ் இனம் — தமிழ் அரசு என்று பேசுவதும், இந்தியாபல இனம் வாழும் ஓர் துணைக்கண்டம் என்று கூறுவதும், நமக்குப் புதுமையாகத்தோன்றுகிறது. நாம் கூறினோம், அதையே அவர்களும் கூறுகிறார்களே என்று ஆச்சரியம் ஏற்படுகிறது. அதாவது, திரைக்கு அப்பக்கம்அமர்ந்திருப்பவர் உள்ளத்திலே தமிழர் என்ற உணர்ச்சியே தோன்றாது என்று எண்ணினோம்—உணர்ச்சி இருப்பது தெரிந்ததும், உளமகிழ்ச்சியுடன் ஆச்சரியப்படுகிறோம்.

காரணம் என்ன? ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளாமலே உழன்று கொண்டிருக்கிறோம்—இடையேதிரையிட்டுக்கொண்டு.

நமக்குமட்டுமல்ல இந்த நிலை. காங்கிரஸ் அன்பருக்கும் இதே தான்.

'தமிழ்முரசு' பதிப்பாசிரியர் தோழர் ம.பொ.சிவஞானக்கிராமணியார், இந்தத்திங்கள்

"...........எனது கொள்கைப்படி தமிழ்நாட்டில் தமிழரசு அமையமுடியும். அதேபோல் ஆந்திர, கேரள, கன்னடமாகாணங்களும் தனித்தனியேபிரிந்து சுயஅரசை நிறுவிக்கொள்ளவும் உரிமை பெற்றதாயிருக்கும். இந்தக்கொள்கையும், 'திராவிடநாட்டிற்கு' உடன் பாடென்றால் அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்" என்றுகுறித்துள்ளார்.

## உடன் பாடென்றால்!

திரை செய்திருக்கும் வேலையைப்பாருங்கள்—அதற்குக்கூட நாம் இணங்குகிறோமோ இல்லையோ என்ற சந்தேகத்தைநண்பர்களுக்குத் தந்திருக்கிறது. சந்தேகம், வேறோர் எண்ணத்தையும் உண்டாக்கிவிட்டது பாருங்கள். ஆனால் 'திராவிடநாட்டின்' கொள்கை இதற்கு நேர்மாறாக இருப்பதாகத் தெரிகிறது' என்று கூறுகிறார். "இருப்பதாகத் தெரிகிறது" என்றுகூறவேண்டிய நிலைமைபிறக்கக்காரணம் திரைதான்.

'திராவிடநாடும்,' திராவிடர் கழகத்தாட்கள் பலவும், தமிழ் அரசுக்கு மாறுபாடான கருத்துக்கொண்டவர்களல்ல—தனித்தமிழகத்தின் அவசியத்தை உணராதவர்களோ, விரும்பாதவர்களோ அல்ல. ஆயின், அவர் தம் குரலொலி வேறாக இருக்கக் காரணம் என்னவெனின், அதுவும் நண்பரே கூறியுள்ளார் 'ஒருவேளை தனித்தனி அரசுகளைக் கொண்ட தமிழ், ஆந்திர, கேரள மாகாணங்களின் கூட்டுறவையே, 'திராவிடஸ்தான்'என்று "திராவிடநாடு"கொள்ளுமாயின் அது சிந்தனைக்குரியதே" என்று தீட்டுகிறார்.

"ஒருவேளை—இருக்குமாயின்"—இந்தச் 'சந்தேகத் தொனி' வரக்காரணம், இடையே உள்ள திரைதான்.

திட்டமாகத் 'திராவிடநாடு' பன்முறை, திராவிடஸ்தான்என்றால், தனித் தமிழரசு, ஆந்திர அரசு, கேரளம், கன்னடம் ஆகியவைகள் கூட்டுறவுடன் வாழ ஒரு அமைப்பே தவிர, ஒன்றையொன்று விழுங்கவும் — சுறண்டவும் அல்ல என்று தீட்டியிருக்கிறது.

'திராவிடநாடு'மட்டும் தீட்டினால்போதாது— திராவிடர்கழகத் தலைவர் பெரியார், இந்தப்பிரச்னையை ஆரம்பித்தபோதே, பத்திரிகைநிருபர்களிடம் விளக்கம் கூறினபோது இதனை எடுத்துரைத்தார், அறிக்கைகளை அனுப்பினார்.

'திரை' செய்த வேலையைப் பாருங்கள். எந்தப்பிரச்னைபற்றி நமக்குள் ஒருமித்த கருத்து ஏற்படவேண்டுமென்றாலும், இந்தத் திரை நீக்கப்பட்டாகவேண்டும்!

●

### சக்தி நாடகசபா

திண்டுக்கல் சோலைஹாலில் நடைபெற்ற சக்தி நாடகசபையாரின் முகாம் முடிவுவிழா 24—9—46 செவ்வாய் இரவு, 9-30 மணிக்கு "கவியின் கனவு" நாடகம் நடிக்கப்பெற்று கொண்டாடப்பட்டது. அதுபோது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமைவகித்தார்கள். "கவியின் கனவு நாடகம் முடிந்ததும் சபைத் தலைவர் தோழர் டி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் கவிஞரை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். பின் கவியரசர் தலைமையுரையில் பேசுகையில்" என்னைப்பன்முறைஇக்கம்பெனியார் அழைத்தும் வரஇயலாமல்போனதற்குவருந்துகின்றேன். இக்கம்பெனி ஆரம்பித்துச் சுமார் மூன்று ஆண்டுகள்இருக்குமெனஎண்ணுகின்றேன். ஆனால். இன்றுதான் இவர்கள் நாடகத்தைகாண வாய்ப்புக் கிடைத்தது. இன்றுஇவர்கள் நாடகத்தை கண்டதும் மற்ற நாட்களை வீணாகக்கழித்து விட்டோமே என்றுதான் வருந்துகின்றேன். ஒருபானை சோற்றுக்கு ஒருசோறுபதம் பார்ப்பதுபோன்று, அறிஞர்கிருஷ்ணசாமியின் திறமைஇதன்மூலம் நன்குவிளங்குகின்றது. கலையில்புரட்சியுண்டாக்கியுள்ளார் அறிஞர் கிருஷ்ணசாமி. மற்றும் நடிகர்கள் உணர்ச்சியுடனும் பாவத்துடனும் நடித்தார்கள், வேறுஎங்கும்இவ்விதம் கண்டதில்லை. சீன்கள், மின்சார அமைப்புகள், பின்னணிசங்கீதஅமைப்புகள் எல்லாம் உயரிய முறையில்அமைந்துள்ளது. இவர்கள் நீடு வாழ்கென வாழ்த்துகின்றேன்" என்றுகூறி தலைமையுரையை முடித்தார்.

### அறிவிப்பு

விக்ரமசிங்கபுரத்தில் "திராவிடநாடு" விற்பனையாளராகத் தோழர் S. P. சுந்தரராஜு அவர்களை ஏற்படுத்தியிருக்கிறோம். பத்திரிகைகிடைக்குமிடம்;— "சுவர்ணவிலாஸ்" சீயக்காய்தூள்கம்பெனி, விக்ரமசிங்கபுரம்.


## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

**80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!**

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

திராவிட நாடு

காஞ்சி] 6—10—46 [ஞாயிறு

# ஆலையூரார் உபதேசம்

★

"கைராட்டையிலே, கேட்குது கீதம்! அதுவே சுதந்திரநாதம்!ராட்டையிலுள்ள நூலிலே இராமன் தாண்டவமாடும் காட்சி, கதருக்குள்ள மேன்மைக்கு அதுவே அத்தாட்சி!"

காந்தியாரின் உபதேசம் இது. இது, அவருக்குள்ள 'ராமபக்தி'யைக்காட்டுவதா, அல்லது கதரிலுள்ள சிரத்தையைக் காட்டுவதா என்பது ஒருபுறம் இருக்க இந்த உபதேசத்தை நமக்கு அருளும் போக்கும், அதன் விளைவும், கவனிக்கும்போது, சிந்தனையே சுழல்கிறது.

ஆலைகளுக்கிடையே இருந்துகொண்டு, 'ஆடுராட்டே' சிந்து பாடுகிறார். அதிசயம்! 'ஆடுராட்டே' சிந்துக்கு 'ஆஹா! அற்புதம்!' என்று பாராட்டுக்கூறிவிட்டு, பனியாக்கள், ஆலைகள் அமைக்கின்றனர். அற்புதம்!! ஆலையூராருக்கு, ஆலை வேண்டாம் என்று கூறுவதைவிட்டு, வேலையின்றித்தன் மக்களைவெளிநாடுகளுக்குக்கூலிகளாக அனுப்பிக் குமுறும் தமிழகத்துக்கு, ஆலை வேண்டாம் என்று கூறுகிறார்—ஏன்? யாரைக் கேட்பது?

மக்கள் பழங்காலக்கருவிகளை, நாளாகவாகமாற்றிக்கொண்டே சென்றனர்; பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல வாகையால். வழுவல என்பது மட்டுமல்ல, மனிதனின் தேவைகள் அதிகரிக்கத் தொடங்கின. வகையில், அளவில், முறையில். அதற்கு ஏற்றபடி, கருவிகள் மாறித்தீரவேண்டி நேரிட்டது. பாலாடையில் பருகிய குழந்தை பிறகு, கோப்பை தேடு. குமரனாகிறான்; தொட்டிலில் இருந்த பிறகு, கட்டிலும் ஏறவேண்டி வரும்! இந்த மாறுதல் நாம் மனதால் எண்ணினால் 'திக்பிரமை' அடையுமளவு ஏற்பட்டிருக்கிறது, மாநிலமெங்கும்.

ஆடை நெய்தலிலும் இது போன்றே, ஆலைகள் தோன்றியுள்ளன. ஆலையும் எடுத்தவுடன் தோன்றிவிடவில்லை. இரவுபகலாக, எத்தனையோ நாட்டு அறிஞர்கள் சிந்தித்துச் சிந்தித்து, பன்முறை தோற்று, பிறகு ஓரளவு வெற்றி பெற்று, ஒருவர் பெற்ற வெற்றியைப் புதியவர் துணைகொண்டு, மேலும் ஆராயத்தொடங்கிப், புதிய வெற்றி பெற்றார்; இதுவும் திருப்தி தந்துவிடவில்லை, அந்த வெற்றிதேடும் வேலை தொடர்ந்து நடந்துவருகிறது. எங்கும், எல்லாத்துறையிலும். கையால் நூற்று,கையால் நெய்த ஆடையாக்கும் முறையான நெசவுதான் ஆதிநாட்களில். அதேபோது இருந்த பிரயாணமுறை, குதிரை ஏற்றம், வியாபாரமுறை பொதிமாடு மீது மூட்டைகளை ஏற்றுதல், போர்முறை, கத்திகேடயம்,வில் அம்பு, என்று இருந்தன. இன்று, ஒன்றுவது உருவம் தெரிந்துகொள்ளக்கூடியவிதமாக இல்லை, அவ்வளவு அற்புதமாக மாறிவிட்டன; மாறிக்கொண்டே உள்ளன, மாறியபடியே இருக்கும்.

கையினால் நூற்றுக் கையினால் நெய்து ஆடையாக்குவதுபிறகு, கொஞ்சம் கொஞ்சமாகமாறுதலாகி, தரியின் முறை மாறி, தரிக்கு மின்சார சக்தி தரும் முறைபுகுந்து, ஆலை என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

இந்த ஆலை, ஆலகாலம்என்று காந்தியார் கூறுகிறார். அவர் இதனை ஏறக்குறைய 1000மைல் அப்புறம் இருந்துகூட, இங்கிருக்கும் பத்திரிகை ஆபீசில் சின்னக்கண்ணாடிப் பெட்டியில், ஆளில்லை, யட்சணி இல்லை, கரம் தெரிவதில்லை எழுதிக்காட்டிவிடுகிறது விஞ்ஞானம். அவர் கூறும் 'அந்தநாளை' ராட்டையில் இராமன் ஆவாகனம் செய்யும் ரகசியசித்தாந்தத்தை, நமக்கு சுகப்பிரமரோ சனக சனாதியரோ, யட்சணியோ ஆஞ்சநேயரோ அறிவிக்கவில்லை; ஆலை போன்றவைகளை அமைத்துத்தந்த எந்த விஞ்ஞானம் பயன்பட்டதோ அதே விஞ்ஞானம் அறிவிக்கிறது.

இந்த வேடிக்கை ஒருபுறம் இருக்க, 'கைராட்டை' வேண்டும்என்று போதிக்கும் காந்தியாரைச்சுற்றி நிற்பவர்கள் ஆலை அரசர்கள்! அது அவருக்கே தெரிகிறது; தெரிந்த மற்றவர்கள் கேட்பரோ என்றும் தெரிகிறது, அதற்குத்தக்கதோர் சமாதானம்கூறவேண்டுமே என்று அவர், 'என் கொள்கைகளுக்கு நேர்மாறாக உள்ள மில்முதலாளிகளின் விருந்தினனாக எப்படி இருக்கிறேன் என்று எண்ணுகிறார்கள்; அதுதான் அகிம்சை' என்று கூறுகிறார்.

அது அவருடைய நிலைமையை விளக்க அவர் உபயோகிக்கும் வாதம், அதுபற்றி நமக்கு அக்கரையுமில்லை, அந்த வாதம் பொருத்தமா என்பதுபற்றி ஆராயவேண்டியதும் முக்கியமல்ல; ஒன்று நமக்குத்தெரியும்; தமது கொள்கைகளுக்கு மாறாக நடந்துகொள்பவர்களிடையே உறவு கொண்டாடி வாழும்முறை அகிம்சையானால், அந்த அகிம்சை,புத்தருக்குத்தெரியவில்லை என்று அர்த்தமாகும், ஏனெனில், நிராசையைத் தமது கொள்கையாகக் கொண்ட போது, ஆசையை ஊட்டவல்ல அரச போகத்தை துறந்தாக வேண்டும் என்று எண்ணி, புத்தர், பாதிராத்திரியில், அழகு மனைவி துயிலும்போது, குழவியின்கொஞ்சுமுகத்தையும்கண்டு சொக்காமல், அரண்மனையை விட்டு வெளி ஏறினார், தமது தத்துவத்தின்படிநடந்துகொள்ள அதுவே மார்க்கம் என்று. சித்தார்த்தருக்கு, இன்றுகாந்தியார் கூறும் 'அகிம்சை' தெரியாது போலும்! தெரியாததே நல்லதாயிற்று; தெரியாததால்தான் சித்தார்த்தர், புத்தரானார். அது எப்படியோ போகட்டும், காந்தியார் கூறும் சமாதானம் தமது நிலைமையை விளக்குவதற்குப்பயன் பட்டாலும் படாவிட்டாலும், முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம் அது அல்ல.

ஆலைகள் ஆலகால விஷம், அவை ஆகாது, என்று காந்தியார் ஆலைக்காலத்திலேகூறுவது மட்டுமல்ல, நெசவுத் தொழிலிலே ஆலைக்காலம் ஏற்பட்டிருப்பதுபோல,பிரயாணத்துறையிலே விமானகாலம், வைத்தியத்துறையிலே ரேடியோமூலம் சிகிச்சை, காட்சித் துறையிலே டெலிவிஷன்காலம், சேதி அறிவிப்புத்துறையிலேகம்பியில்லாத் தந்திக்காலம், அரசியல் துறையிலே கிருஷ்ணமேனன்பலடோவைச்சந்திக்கும்காலம், என்று அதிஅற்புதமான மாறுதல்கள் வேறு எத்தனையோ துறைகளிலே தோன்றியுள்ள காலத்திலே, நெசவுவிஷயமாகமட்டும், ஆலைகள் ஏற்பட்டிருப்பதை, மாறுதலைக்கண்டிக்கிறார்—ஆலைகள் விஷம் என்று கூறுகிறார். இது மிக மிகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம். மற்றத் துறைகளிலேயும், நெசவுத்துறையிலே உள்ள ஆலைபோன்ற,நவீன சாதனங்கள் ஆட்சி செய்கின்றன; காந்தியார் அவைகளை விட்டுவிடும்படிச் சொல்லவுமில்லை, அவராலேயேகூட அவைகளின்றிக் காலந்தள்ளமுடியவுமில்லை; ஆத்மசக்தியிலே ஆழ்ந்த நம்பிக்கைகொண்ட அவருக்கு நோய்கண்டபோது ஆறு டாக்டர்கள் தேவைப்பட்டனர்!

ஆலைகளைக்கொண்டு கொள்ளையடிக்கிறார்கள். காந்தியார் அதனாலேயே அதனைக்கண்டிக்கிறார். மற்றத்துறைகளிலே ஏற்பட்ட நவீனக் கருவிகளையும் தொழில் முறைகளையும் கண்டிக்காமல் ஆலையைமட்டும் விஷம் என்று கூறுவதற்குக் காரணம் அதுதான் என்று அன்பர்கள் அவர் சார்பிலேவாதிடக்கூடும். ஆனால் அந்த வாதமும் பயன்படாது; ஏனெனில் கொள்ளை இலாபம், ஆலையில்மட்டுமல்ல, தற்காலம் நடத்தப்படும் நவீனத்தொழில் எதிலும் கிடைக்கும். குன்மத்துக்குச்செந்தூரம் கொடுத்துவிட்டு சித்தவைத்தியர் 'வாங்குகிற'பணம்' அதற்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில்ஒருமாதம்இருக்கவேண்டும் என்று 'யோசனை' தருகிற டாக்டருக்கு நாம்தரும் வண்டி வாடகைப் பணத்தைவிடக்குறைவு. நவீன முறையினால், இலாபம், தொழில்நடத்துபவர்களுக்கு,நெசவுத்தொழிலில் மட்டுமல்ல, எந்த வகையான தொழிலிலும் கிடைக்கிறது; எனவே,ஆலைகளைமட்டும்'விஷம்' என்று கூறினதற்கு, பொருத்தமானகாரணத்தை அன்பர்கள் கண்டறிந்தும் சொல்ல முடியாது.

மற்றத் தொழிலைப் போல அல்ல நெசவு. மற்றவைக்கேனும் மெஷின்தேவைப்படலாம், மனிதனால்முடியாமலிருக்கலாம், நெசவு அப்படி அல்ல,கையினால் நூற்று கையினால் நெய்துகொள்ளலாம், ஆகவேதான்காந்தியார் அதனை அவ்வளவு வற்புறுத்துகிறார் என்று வாதிடக்கூடும்—அவரல்ல — அவர் சார்பிலே அன்பர்கள்! அதுவும் பயனற்றதாகிறது யோசிக்கும்போது. நெசவுமட்டுமல்ல,எந்தத் தொழிலும் மெஷின் இன்றி நடத்தலாம்—நடந்ததுதான். தசரத குமாரன் விமானமார்க்கமாக அல்ல, இலங்கை சென்றது! அசோகன் ரேடியோ கேட்டதில்லை! கனிஷ்கன் டெலிபோனில் பேசினதில்லை. நாம் இவைகளைப்பெற்று இருக்கிறோம்; நாம்மட்டுமல்ல, ஆலையை ஆலகாலம் என்றுகூறும் காந்தியாரும் இவைகளை உபயோகிக்கிறார்.

நெசவுத் தொழிலுக்கு "ராட்டையே' போதும், ஆலை, விஷமாகும் என்றுகூறும் காந்தியார், அனைத்தையும் முழுமூச்சாகக்கண்டிக்கலாம். மனிதன், இன்று மெஷின் காலத்தினால் பெற்றுள்ள எல்லாக் கருவியும் இல்லாமலேயே,அந்தத்தொழில்களை நடத்தலாம்; நடத்தினதுண்டு.

ஏன் காந்தியார், ஆலைகளை மட்டும், குறிப்பாகக் கண்டிக்க முன்வந்தார்? பதில்கூறும்படிக் கேட்டால், முடியாதகாரணத்தால் அன்பர்களுக்குக் கோபம் வரும்; எனவே அவர்களைச் சிந்திக்கும்படிமட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

போகட்டும், ஆலை ஆலகாலம் போன்றது என்ற இந்த உபதேசத்தை ஏன், அகிலஇந்தியக் காங்கரசிலே தீர்மானமாக்கி கள்ளுக்கடை ஒழிப்புப்போல ஆலைஒழிப்பு இயக்கமொன்று நடத்தக்கூடாது? இதுவும் கேள்வி அல்ல, சிந்தனைக்கு!

அத்தகைய ஒழிப்பு இயக்கத்தை அவர் துவக்காததைக்கூட மறந்துவிடுவோம், ஏன் அவர் இப்போதாவது ஆலைக்காரரைக் கூட்டிவைத்து அறிவுரை கூறலாகாது? அதுவும்செய்யவில்லை. போகட்டும், ஏன், ஆலைகள்ஆலகாலம் என்ற உபதேசத்தை நமக்குமட்டும்செய்யவேண்டும்?

நமது மாகாண முதலமைச்சர் சென்ற கிழமை வடநாடு சென்று காந்தியாரைத் தரிசித்தார். அதுபோது, காந்தியார், "ஆலைகள் விஷம் போன்றவை. இப்போது பல மாகாணத்தவர்கள் புதிது புதிதாக ஆலைகள் அமைக்கவேண்டும் என்றுஆவல்கொண்டுள்ளனர். இது ஆகாது கூடாது" என்றனர்க்க பிரகாசம், "ஆம்! ஐயனே! அதற்கென்ன ஐயம் மெய்யனே!" என்று பேசியதோடுநிற்கவில்லை, "என்மாகாணத்திலே புதியநெச

(அடுத்த பக்கம் பார்க்க)

## ஆலையூரார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வாலேகளை ஏற்படுத்தப்போவ தில்லை. அந்த எண்ணமே எனக் கில்லை. கதர்த்திட்டமே என் கருத்துக்கேற்றது. அது அபி விருத்தியானதும், இப்போது என் மாகாணத்தில் உள்ள ஆலே களையும் மூடிவிடுகிறேன் என்ருராம். இவ்விதம் முதலமைச்சர் தமது குருபக்தியைக் காட்டிக் கொண்டார். நமக்கு இருக்கும் கவலை எல்லாம், 'என் குரு நமது மாகாணத்தவருக்குமட்டும் இந்த மகத்தான உபதேசம் புரிகிருர், ஆலே அரசர்கள்கொலுவீற்றிருக்கும் பம்பாய் குஜராத் மார்வார், கோலாப்பூர், ராய்பூர், ஷோலாப்பூர், ஆமதாபாத், கான்பூர் ஆகிய ஆலைநகர்களிலே, அடிக்கடி பவனிவருபவர், ஆலே அரசர்களுக்கு அடிக்கடி தரிசனம் தருபவர், அந்தச் சமயத்திலே இந்தஉபதேசத்தை அவர்களுக்கு அருளாத காரணம் என்ன? அந்த ஆலே அரசுகள் அப்பு அழுக்கின்றி இருப்பதுடன், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளருவதை அவர் அறியாரா? அறிந்தும் அதனைத்தடுக்காத காரணம் என்ன? அவருடைய கோபப் பார்வையை அப்பக்கம் திருப்பிஞல்போதாதா? அவர்களை ஆலேபுரிகளில் அரசோச்சவிட்டுவைத்து, எதற்காகவோவந்தபிரஜாசத்தை அருகழைத்து 'அப்பனே! ஆலேகளிலே ஆசை கொள்ளாதே! அந்தோ அது விஷம், பொல்லாதே!" என்று உபதேசம்செய்கிருர். இவைகளைப்பற்றிநீங்கள் கொஞ்சம்சிந்தித்துப்பாருங்கள்.

"ஆலேகள்விஷம்தான்ஐயனே! அந்த விஷம் பரவிய இடமாக விளங்கும் தங்கள் தேசத்திலே, அதுபற்றிக் கொஞ்சம் அழுத்தமாகக்கண்டித்துப் பேசும்." என்று பிரகாசம்காரு கூறிஞரா? இல்லை! ஆலேகளிலே அடியேன் காந்திதாசனுக்கு அணுவளவும் ஆசை கிடையாது; கதரே என் நோக்கம், அது பரவியதும், இப்போதுள்ள ஆலேகளையும் மூடிவிடுகிறேன்' என்று கூறிஞராம். ஏன்? அதைத்தான் கொஞ்சம் உங்களை யோசிக்கச் சொல்கிறேன். விஞ்ஞான காலத்திலே, வீட்டுப் பரணேயில் இருந்த ராட்டை, கூடத்துக்கு வந்தது ஆச்சரியமில்லை. அதற்குப்பிரசாரம் நடைபெறுவதுகூட அவ்வளவு ஆச்சரியமில்லை, எல்லாத் துறைகளிலும்புகுந்துள்ளநவீன சாதனங்களைக் கண்டிக்காமல், நெசவு விஷயமாகமட்டும் இவ்வளவு கண்டனம் பிறந்ததும் ஆச்சரியமில்லை, இந்த ஆச்சரியங்களைச் சாமான்யமாக்கிவிடுகிறது ஆலே, விஷம் என்ற உபதேசத்தை, ஆலேகள் நாளேக் கொன்ருக வளரும் தமது வட்டாரத்திலே செய்யாமல், நமது மாகாணத்துக்கு அவர் செய்வதும், அதன்படியே நடப்பதாக நமது முதலமைச்சர் வாக்களிப்பதும்.

ஆலே அரசர்கள் அரசோச்சும் வடநாட்டிலே, வாழும் காந்தியார், கைராட்டைபற்றிய பிரசாரத்தைத் துவக்கி, கதர்த்திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர ஆரம்பித்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகின்றன. ஆஞல், இதன்பலன் என்ன? நமது மாகாண முதலமைச்சர் கூறிவிட்டு வந்தாரே, புதிய ஆலேகள் அமைக்கமாட்டேன் — பழைய ஆலேகளையும் மூடிவிடுகிறேன் கொஞ்சநாட்களில் என்று, அது போல, ஆலே அரசர்கள் கூறினரா? இல்லை! அவர்கள் வசிக்கும் வட்டாரத்திலே ஆட்சி செய்யும் காங்கிரஸ் மந்திரிமார்கள் கூறினரா? இல்லை! அகில இந்தியாவுக்கும் 'சர்க்கார்' நடத்தும் காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் எதிர்காலத் திட்டம் ஆலேகளை மூடுவது என்று கூறினரா? இல்லை! கூறுவரா? கூறமாட்டார்கள்! ஏன்? நவீன சாதனங்களைக் கொண்ட தொழிற்சாலைகளை அமைப்பது, அவர்களின் திட்டம், அரசு ஏறுமுன்பே போடப்பட்டது. தேசியத்தொழில் திட்டக் கமிட்டிக்குத்தலைவரே பண்டித ஜவஹர். அந்தத்திட்டம் நமது மாகாண முதலமைச்சர் வகுத்துள்ள 'வீட்டுக்கொரு ராட்டைத்' திட்டமல்ல: வெளிஉலகு இந்த உபகண்டத்துச் செல்வத்தைச்சுறண்டாதபடி பாதுகாத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். அதற்காகத் தொழில் வளம் பெருகவேண்டும் என்பதாகும். இதற்கான 'திட்டம்' மேஞட்டார்கண்டு பொருமைப்படக் கூடிய அளவுதிறமுடன்போடப்பட்டிருக்கிறது. இதனைக்காந்தியார் தடுக்கவில்லை — கூடாது என்று கூறவில்லை — கூருதது மட்டுமல்ல, இடைக்கால சர்க்காரிலே சப்ளேமந்திரியாக இருக்கும் ஆச்சாரியார் சென்ற கிழமை கூறிஞர் 'காந்தியார் தொழிற்சாலே வளர்ச்சி முறைக்கு விரோதி அல்ல' என்று. இந்நிலையில், இந்த மாகாணத்து முதலமைச்சரிடம் ஆலேகள் விஷம்—என்று கூறுவானேன், அந்தப்பக்தரும் 'ஆமாம்! ஆலே வேண்டேன்; உள்ளதையும் மூடிவிடுவேன்' என்று கூறுவானேன். நாம் திகைப்படைகிறோம் நண்பர்களே, உங்கள் நிலை எப்படியோ!

திகைப்பு,திகிலாகும்படியான புள்ளிவிவரங்கள்நம்மைத்தாக்குகின்றன.

கடந்த இருபதாண்டுகளாக ராட்டைக்கழகம் அமைத்து கண்டபலன் என்ன? சர்க்கார் 4 கோடி செலவிட்டுக், கதரை வளர்க்கவேண்டி நேரிடுகிறது. அதுமட்டுமல்ல.

இன்று இந்தியாவிலே சுமார் 407 நெசவாலேகள் உள்ளன; காந்தியாரின் சகாப்தத்திலே, ஆலேகள், இருமடங்கு வளர்ந்துள்ளன. இதோபுள்ளி விவரம், பாருங்கள்.

| வருஷம் | ஆலேகள் |
|---|---|
| 1876 | 47 |
| 1900 | 193 |
| 1920 | 253 |
| 1943 | 407 |

காந்தியாரின் பிரச்சாரயந்திரம், 1920 லிருந்து 1943 வரை, எவ்வளவு பலமாக வேலே செய்திருக்கிறது, இருந்தும் நிலைமை என்ன? 1920ம் ஆண்டிலே 253 மில்கள் இருந்தன. 1943ல் 407 மில்கள்—இன்னும் வளர்ந்தபடி உள்ளன. ஆஞல் இவைகள் முக்காலே மூன்றுவீசம், வடநாட்டிலே!

காந்தியார், ஆலே, விஷம் கைராட்டையே மக்களைக்காப்பாற்றும் மார்க்கம்என்று இங்கு பிரசாரம் செய்துகொண்டிருந்த போது, சிங்களத்தில் ஆலேகள் பெருகின என்ருல், சிந்தனைக்குச் செந்தேள் இராது, ஆலேகள் பெருகியது அவர்வாழும்வடநாட்டில். அவருக்குச்செல்வாக்கோ அமோகம்-குருபக்தியின்போக்கு எப்படி இருக்கிறது? 1920-ல் 253 ஆலேகள்மட்டும் இருந்தன, 1943ல் காந்தியார் புகழும்செல்வாக்கும் ஓங்கி வளர்ந்தது போலவே, அதனுடன் போட்டியிடும் வேகத்திலும் அளவிலும் ஆலேகளும் வளர்ந்துவிட்டன.

ஆலேகள் எண்ணிக்கையில் பெருகிவிட்டன என்பதற்கு வாதங்கள் தேவைஇல்லை. இன்னுமோர் புள்ளிவிவரம், நிலைமையை மேலும் நன்ருகப் படம் பிடித்துக்காட்ட.

ஆடைகள், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கிடைத்துவந்தன. இதிலே வெளிநாட்டு ஜவுளி அதிகமாகஇருந்ததால் ஏராளமான செல்வம், சீமை சென்றது. இதஞல் நாடு,

4-ம் காலம் பார்க்க

ஏழ்மைக்கோலம் கொண்டது. சுதேசி இயக்கம் ஆரம்பமாகி, அன்னிய ஆடை பகிஷ்கரிக்கப்பட்டது. இன்று வெளிநாட்டு ஜவுளி அதிகம் வருவதுகிடையாது. உள்நாட்டு ஆடையே அமோகம். ஆஞல், உள்நாட்டு ஆடை இருவகை அல்லவா! கைத்தறி—ஆலேத்துணி. இரண்டிலே, காந்தீயதத்துவத்தின்படி, ஆலேயோ விஷம், கதரோதாரகம், ஆஞல், தத்துவத்துக்கும் நாட்டு நடவடிக்கைக்கும் உள்ள தொடர்பைப் பாருங்கள்.

1897ம் ஆண்டு, மக்கள் உபயோகித்த ஆடையில், 100க்கு 27 பங்கு, உள்நாட்டு கைத்தறி தயாரித்தவை, 10 பங்குதான் உள்நாட்டு மில்ஆடை, மற்ற 63 பங்கும் வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதியானவை. 1941ம் ஆண்டு கணக்குப்படி, வெளிநாட்டு ஜவுளி 100க்கு 7 பங்குதான் வந்தது. அதாவது 100க்கு63 பங்கு இருந்த வெளிநாட்டு ஜவுளி 100க்கு 7 என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது—செல்வம் சீமைக்குச்செல்வது தடுக்கப்பட்டுவிட்டது— சந்தோஷப்படவேண்டிய விஷயம். ஆஞல், 1897ல் 63 பங்காக இருந்து 1941ல் 7 பங்காகச் சீமைஜவுளி குறைந்ததே தவிர கைத்தறியிஞல் தயாரான ஆடையின் அளவு அதிகப்படவில்லை. 1897ல், 100க்கு 27 பங்கு கைத்தறி ஆடை உபயோகிக்கப்பட்டது; 1941ல் 28 பங்கு! இவ்வளவுதான் முன்னேற்றம். ஆஞல் யார் முன்னேறினர்? 1897ல் 100-க்கு 10 பங்குமட்டும்தானே, உள்நாட்டு ஆலேமூலம் ஆடை கிடைத்தது, அது 1941ல் 100க்கு 64பங்காகிவிட்டது. அதாவது சீமை ஜவுளியின் இடத்தை ஆலே பிடித்துக்கொண்டது. ஆலேகள் பெரும்பான்மையானவை, வடநாட்டில். அதாவது, வடநாடு, சீமையாகிவிட்டது. அது வளர்ந்தவகையையும் புள்ளி விவரமாகக் காட்டுகிறோம் பாருங்கள்.

| வருஷம். | உள்நாட்டு கைத்தறி (100-க்கு) | உள்நாட்டு ஆலே (100-க்கு) | வெளிநாட்டு ஜவுளி (100-க்கு) |
|---|---|---|---|
| 1897 | 27 | 10 | 63 |
| 1920 | 29 | 38 | 33 |
| 1932 | 29 | 56 | 13 |
| 1941 | 28 | 64 | 7 |

தத்துவம் தத்துகிறது, ஆலே கொழுத்துவிட்டது! திருப்தியா? இல்லையே! ஏன் இந்த 'விஷம்' இவ்வளவு பரவிற்று? எப்படி முடிந்தது? 100க்கு 63 பங்கு சீமைஜவுளிவாங்கி வந்தமக்கள், காந்தியார் காட்டியவழி நடந்து இன்று அதனை 100க்கு 7 ஆகக்குறைத்துவிட்டனர்; காந்தியாரோ சீமை ஜவுளிகூடாது என்று மட்டும் கூறவில்லை, ஆலேத்துணியே ஆகாது, 'கதர்'தான் வேண்டும் என்ருர், நடந்தது என்ன, கைத்தறிமுழுவதுமே (கதர்மட்டுமல்ல) முன்பிருந்த இடத்திலேயே இருக்கிறது; எதை ஆலகாலம் என்ருரோ அது அவருடைய பக்தர்கள், சீடர்கள், தளபதிகள், கோட்டைக்காவலர்கள்நிறைந்த வடநாட்டிலே, ஓங்கிவளர்ந்துவிட்டது. சீமை பம்பாய்' துறைமுகத்தின்வழியாக வந்து இறங்கி, விந்திய மலையைக்கடக்க மனமின்றி, வடநாட்டிலேயே வாசம் செய்கிறது! சரியா? திருப்தியா? சொல்லவேண்டாம், யோசியுங்கள். (5-ம் பக்கம் பார்க்க)




## ஆலைபூரார்

6-ம் பக்கத் தொடர்ச்சி

பிரிட்டிஷ் வியாபார போர்டின் பிரதிநிதி ஒருவரையும் இந்தியாவுக்குக் கிரிப்ஸ் அனுப்பி வைத்தார். அவர் பெயர் J. தாம்சன். இவருக்கு இடப்பட்ட வேலை, இந்தியாவுக்கு என்னென்ன வகையான யந்திரங்கள் தேவைப்படும், அவைகளை எப்படி எப்படி பிரிட்டன் அனுப்புவது என்பதுபற்றிக் கண்டறிய வேண்டும் என்பது. அவர் 1945 அக்டோபரில் இந்தியா வந்தார். பம்பாயில் உள்ள தொழிற்சாலைமுதலாளிகளுடன் கலந்து பேசினார்.

ஆகவே, பிரிட்டன், அரசியல் பீடத்தில் பண்டிதரை அமரவைக்கும் காரியத்தில் மட்டுமல்ல அக்கரை கொண்டது. முக்கியமான அலுவல், முதலாளிகளுடன் கலந்து பேசி, பொருளாதாரத் தொடர்பைச் சரிப்படுத்திக் கொள்வதுதான். அந்தக் காரியம் வெற்றிகரமாக முடிந்ததாலேயே, காங்கிரசுக்கு டில்லியில் இடமளித்தனர்,

இவ்வளவும் நடைபெறும் வேளையில், காந்தியார் ஆலை ஆலகாலம் என்று கூறுவதும், அதற்கு நமது மாகாண முதல் அமைச்சர், 'ததாஸ்து' கூறுவதும், எந்த விதமான நகைச்சுவையோ நாமறியோம்.

இத்துடன் நின்றுவிடவில்லை. உலகில் பல நாடுகளுக்குள்ளும், தங்கு தடையின்றி வியாபாரம் நடைபெறவேண்டும், ஒரு நாட்டுச் சரக்குமீது மற்றோர் நாடு சுங்க வரி போடுவது கூடாது என்று அமெரிக்கா போதனை புரிந்துவருகிறது. இது இந்திய சர்க்காருக்கு இப்போது கிடைத்துவரும் சுங்கவரி வருமானத்தையும் வடநாட்டு முதலாளிகளுக்குக் கிடைத்துவரும் தொழில் பாதுகாப்பையும் கெடுத்துவிடக் கூடுமாகையால், இந்தப் போதனையை முதலாளிகள் ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லை. இதுபற்றி கண்டறிய, கலந்து பேச, விளக்கமுரைக்க, அமெரிக்க சர்க்காரின் பிரதிநிதிகள் இருவர் இங்கு வர ஏற்பாடாகி இருக்கிறது! இந்தக் கலந்து பேசும் காரியங்கள் முடிந்து, முதலாளிகள் மனதில் திருப்தி ஏற்பட்ட பிறகு உலக வியாபார முறை எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றி முடிவுசெய்ய, லண்டனில் 1947 ஜனவரியில் மாநாடு நடைபெற்றுப் பிறகு அமெரிக்காவில் மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

இந்தச் சங்கிலித் தொடரில், கைராட்டினத்துக்கு எங்கே இடம் என்பதுபற்றிக் கவலைப்படாமல், இழையில் இராமனைக் காண்கிறேன் என்று கூறிவிட்டால் போதுமா? இப்படிப்பட்ட பலமான, முன்னேற்பாடான, திட்டத்தை, நெசவுத் தொழிலுக்கும் வேறுபல தொழிலுக்கும் தயாரித்துக்கொண்டு வடநாடு இருக்கும்போது இருக்கும் ஆலைகளையும் மூடிவிடுகிறேனென்று கூறுகிறாரே நமது மாகாணமுதலமைச்சர், சரியா? வட நாட்டுக்கு, தென்னாட்டை மார்க்கட்டாக்குவது தவிர வேறென்ன நடக்கும்? நமது நாட்டுச் செல்வம் நசித்து, தொழில் குன்றி, பாட்டாளிகள் வேலையின்றித் திண்டாடுவதற்குத்தானே இது கொண்டுபோய்விடும். இது முறையா? என்பதை, நோய் முற்று முன்பு நேயர்கள் யோசிக்கவேண்டுகிறோம்.

இன்று வட நாடு அடைந்துள்ள முற்போக்கு சாமான்யமானதென்றோ, அது நமது நாட்டை ஒன்றும் செய்துவிடாதென்றோ எண்ணுவது, வெறும் ஏமாளித்தனமாக மட்டும் முடியாது, ஒரு 150 ஆண்டு சீமையின் பிடியில் சிக்கிச் சீரழிந்ததோடு சிரமம் முடிவது போய், மேலும் ஓர் நூற்றாண்டு, வடநாட்டு முதலாளிகளின் பிடியில் நாம் சிக்கிச் சீரழிய வேண்டி நேரிடும்.

அர்ஷனின் படை பலமும், அசோகனின் அன்பு போதனையும், அக்பரின் சமரசமும் சாதிக்காமல் போன காரியத்தை—அதாவது வடநாட்டுக்குத் தென்னாடு அடிமைப்படுவதை—மார்வார் குஜராத் வியாபாரிகள் சாதிக்க வழி பிறந்திருக்கிறது. அடிமைச் சங்கிலி, தயாராகிவிட்டது. நாம் அதிலே கட்டுண்டுவிட்டால், தலை அறுபடுவது இந்தத் தலை முறையில் இல்லை. இதனைக் காங்கிரசில் உள்ள தமிழர் உணர வேண்டுகிறோம்.

ஆலைகள் என்றால், சாமான்யமான இலாபமல்ல—பணத்தைச் 'செப்படி' வித்தை செய்யும் இடம். போடுகிற 'முதல்' தொகையைப் போல, பன்மடங்கு அதிகமாக இலாபத்தைப் பெறும் இடமாகி விட்டது. ஒரு சில வடநாட்டு ஆலைகளின் இலாபக் கணக்கு மட்டும் காட்டுகிறோம், நிலைமையை உணர்த்த.

ஆலைகள், கதையில் வரும் 'அலாவுதீன் தீபம்' போன்ற இலாபத்தைத் தருவதைக் கவனியுங்கள். 1944-ம் ஆண்டிலும், 1945-லும், சில மில்கள் பெற்ற இலாபமே கீழே தருகிறோம்.

இந்தூர் ஹுகும் சந்த் மில்: 36,85,228-11-0. இந்த இலாபம், செலவினம் நீக்கி, வரி நீக்கி, மெஷின்கள் தேய்வுக்கு ஈடு செய்வதற்காகத் தனியாகச் சேர்த்து வைக்கப்படும் பணம் நீக்கி, கட்டிடம் மெஷின் ரிப்பேர் நீக்கிக் கிடைத்தது. இந்த இலாபத்திலே, ஆலையின் மானேஜிங் ஏஜண்டுக்குக் கிடைத்த பகுதி சாமான்யமல்ல! 7,87,483-8-6. இதுபோன்ற கொழுத்த தொகை வரக்கூடிய படி, முதலாளிகள் பல கம்பெனிகளில் மானேஜிங் ஏஜண்டுகளாக உள்ளனர். இந்தூர்—மால்வா யுனைடெட் மில் பெற்ற இலாபம் 21,67,810—12—3. கல்யாண்மல் மில்லின் இலாபம் 18,09,871—7—1. நந்தலால் பண்டாரி மில்லுக்குக் கிடைத்த இலாபம் 30,35,159—14—0. ஆமதாபாத், நியூ கமர்ஷியல் மில்லின் இலாபம் 27,85,094—10—11. ஆமதாபாத் விக்ரம் மில்லின் இலாபம் 17,59,600—11—4. பம்பாய் டாட்டா மில்லின் இலாபம் 9,86,006—0—0 பம்பாய் மதுசூதன் மில்லின் இலாபம் 50,63,538—3—11. ஆமதாபாத், அம்பிகா மில் இலாபம் 7,83,415—13—8.

இந்த இலாபமெல்லாம் ஒரு வருஷத்துக் கணக்கு—மில் ஆரம்ப முதல் அல்ல!

முன்பே கூறினோம், இது நிகர இலாபம்—மொத்த இலாபம் கணக்குப் பார்த்தால் பிரமித்துப் போய்விட நேரிடும். உதாரணமாக இந்த அம்பிகா மில்லின் மொத்த இலாபத்தில், நிகரம் இந்த 7,83,415 ரூபாய். இது அன்றி இலாபத்தில் 3,00,000, மெஷின் தேய்வுக்காகத் தனியாக வைத்துள்ளனர் அந்த வருஷ இலாபத்தில் எடுத்து. இதன்றி, வரிச் செலவுக்காக 25,75,000 ரூபாய் எடுத்தனர். இதுபோலத்தான் ஒவ்வொரு மில் கணக்கும்.

ஆரியோதயா மில் ஆமதாபாத், பெற்ற இலாபம் 25,70 110—3—8. பம்பாய், டான்மில் இலாபம் 10,72'264-10-7. பம்பாய், நியூ யூனியன் மில் இலாபம் 28,26,560-6-2. பம்பாய் சாகூன் மில் இலாபம் 32,51,121—0—2. பம்பாய் டேவிட் மில் இலாபம் 18,36,110—0—0. இந்தூர், ராஜ்குமார் மில் இலாபம் 7,62,097-0-0. பம்பாய், அட்வான்ஸ்மில் இலாபம் 6,33,343-0-0 பேயிர் மில் இலாபம் 11,86,755—0—0.

இப்படி இலாபம், கோடிக் கணக்காகும், மொத்த ஆலைகளின் ஏடுகளைப் பார்த்தால். இவ்வளவு இலாபமும், வடநாட்டுக்கு—நமது நாட்டுப் பணம்! நமது நாரீமணிகளின் சேலையும் நமது ஆடையும் கோடிக்கணக்கான பணத்தைக் குவிக்கின்றன வடநாட்டிலே. நமக்கென்று, உள்ள மில்களோ சொற்பம்—அவைகளில் பெரும்பான்மையானவை, நூல் நூற்கும் இடங்களேயாகும். ஆடை நெய்யும் ஆலைகளிலே, சில வெள்ளைக்காரனுக்குச் சொந்தம், B and C போல, ஹார்வி மில் போல. இப்போது நம் நாட்டு நிலைமையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். ஆலையே வேண்டாம் என்று காந்தியார் அறவுரை கூறுவதை பக்தியோடு கேட்பவர் யார், பாசாங்கு செய்துகொண்டு, பணத்தை ஆலைமூலம் மலைபோல் குவித்துக்கொள்பவர்கள் யார் என்று கூறுங்கள்—கூற வேண்டாம்—யோசியுங்கள்.

வடநாட்டு முதலாளித்வ முறைக்கு ஈடு, இங்கு காட்டவே முடியாது. ஒரு உதாரணம், வடநாட்டு முதலாளி எப்படி வளருகிறான், இலாப வேட்டையில் எப்படி எப்படி ஈடுபடுகிறான் என்பதை விளக்க.

சேட் கோவிந்தராம் சேக்சேரியா என்றோர் முதலாளி, 1946, மே 22ந் தேதி காலமானார். மரணப் படுக்கையில் இருக்கும்போது, 50 இலட்சம் ரூபாய் தர்மத் தொகை கொடுத்தார். நல்ல மனமுடையவரின் வரலாறே கூறுகிறோம்—கண்டிக்க அல்ல—நம்மவர்கள், வடநாட்டிலே வளரும் முதலாளித்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.

சேட் கோவிந்தராமுக்கு என்ன தொழில்? ஒன்றல்ல, இரண்டல்ல. அவருடைய வாழ்க்கையைக் கவனியுங்கள். 1932ல் இவர் பருத்தி ஜின்னிங் பாக்டரி அமைத்தார், இலாபம் கிடைத்தது. அதோ கிடைத்த இலாபத்தைக் கொண்டு "ராமகிருஷ்ணா" என்று இருந்து விட்டாரா? இல்லை!

இந்தூர் மால்வா மில்லுக்கு மானேஜிங் ஏஜண்டானார். பழைய தொழிலுடன் புதிய வேலை! இரட்டை இலாபம். மானேஜிங் ஏஜண்டுக்கு இலாபம் வரும் அளவு, முன்னாலே குறித்திருக்கிறோம். இந்த அளவோடு நின்றாரா? இல்லை!

1937ல், பம்பாயில் சீம்பாய் மில்லை விலைக்கு வாங்கினார். கொடுத்த தொகை எவ்வளவு? 12½ இலட்சம்! எதி இலாபத் தொகை! எதற்கு வாங்கினார்? மேற்கொண்டு இலாபம் பெற. 1941ல், ஐக்ய மாகாணத்தில், பிஷ்வான் சர்க்கரை ஆலை ஆரம்பித்தார். அதே ஆண்டில் கண்டேஷ் பிரதேசத்தில், நிலக் கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலையைத் துவக்கினர்.

1943ல், அகர்வால் கம்பெனியாருடன் சேர்ந்து கூட்டாக பம்பாயில் பெரிய ஆலையான சாசூன் மில்லை விலைக்கு வாங்கினர்.

இடையே, வேலையோடு வேலையாக, 1932-ல் பாப்ரான் என்ற இடத்தில் ஒரு சர்க்கரை ஆலை, சிந்து மாகாண ஹைதராபாத்தில் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை, இவைகளையும் ஆரம்பித்தார்.

இவ்வளவு இலாப வேட்டையாடினார். பெரும்பாலான ஆலைகளில், குடும்பமே, மிகப் பெரும்பான்மையான பங்குதாரராக இருந்தது. இப்படி வளருகிறது முதலாளித்துவம் அங்கு!

டால்மியா என்னும் முதலாளியை, நம்மவர்கள் பார்த்ததில்லை—பெயர் பிரசித்தம். எவ்வளவோ தொழில் இருந்தும் என்ன! இப்போது, ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவுசெய்து 8 கம்பெனிகளை விலைக்கு வாங்கினார். விமானக் கம்பெனி, ரசாயனக் கம்பெனி போன்றவைகள். சேலத்தில் கிடைக்கும் "பாக்சைட்" என்ற கனிப் பொருளை, அலுமினியத் தொழி

B-பக்கம் பார்க்கவும்

## ஆலையூரார்

A-பக்கம் தொடர்ச்சி

லுக்குப் பயன்படுத்த, அமெரிக்காவிலுள்ள ஒரு கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள டால்மியா முயற்சிக்கிறாராம்! சேலம் வாசிகள்கூட அறிந்துகொண்டிருக்க முடியாது, தங்கள் பூமிக்கடியிலே, வடநாட்டானையும் அமெரிக்கனையும் வாழவைக்கும் செல்வம் இருக்கிறது என்ற சூட்சமம்.

ராம்பூர் என்றோர் வடநாட்டு சமஸ்தானம், அங்கு சகலவித தொழிற்சாலையும் டால்மியா கம்பெனிக்கு! ராம்பூர் சர்க்கரை ஆலை, ரஜா சர்க்கரை ஆலை, ராம்பூர் சோள மில், ராம்பூர் என்ஜினியரிங் தொழிற் சாலை இப்படி சகலமும். ராம்பூருக்கு ஒரு ராஜாகூட இருக்கிறார்! இருந்து!! டால்மியாவிடம் என்ன செய்ய முடியும்? ஜீவநாடி அவ்வளவும் டால்மியாவிடம்!

இப்படி, பார்க்குமிட மெங்கும், எந்தத் தொழிலிலும் தமது பிடியைப் பலப்படுத்திக்கொண்டுள்ளனர்—மேலும் மேலும்— இப்போது முன்னைவிட அதிக ஜரூராக!!

இந்த முறை மட்டுமல்ல. வடநாட்டு முதலாளிகள், இப்போது வெளிநாட்டு முதலாளிகளுக்கு ஏஜண்டுகள். ஒரு உதாரணம்: ஆமதாபாத்தில், சுவஸ்திக் நெசவாலை ஒன்று இருக்கிறது. அந்த மில், பிரான்சில்உள்ளடீ. டாய்ரேலிலி கம்பனிக்கு, இத்தாலியில் உள்ள, மானிபாத்துரா இடாலியான கம்பெனிக்கு, பிரிட்டனில் உள்ளலண்ட்கம்பெனிக்கு, ஜான் நெயிலர் கம்பெனிக்கு இத்தாலியிலுள்ள மார்ட்டினோ ஸ்கால்ஜியாகம்பெனிக்கு, இப்படிப் பல வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு சோல் ஏஜண்டுகள்!

இவ்வண்ணம் வளருகிறது முதலாளித்வம். ஆலைகள் பெருகுகின்றன. இலாபம் கோடி கோடியாகச் சேருகிறது. இந்நிலையில், ஏன் இங்கு நாம், ஆலைகள் அமைக்கக்கூடாது! அது ஆலகாலம் என்றால், எப்படி அந்த ஆலகாலத்தை வடநாடு மட்டும் தாங்கிக் கொண்டது. உண்மையிலே விஷமானால், அதனை எங்கும் இருக்கவிடாமல் தடுக்க ஏன் காந்தியார் முயற்சிக்கவில்லை? அந்த விஷத்தை மேலும் விருத்தி செய்ய, பம்பாய் திட்டம், பண்டிதர் ஏற்றுக்கொண்ட தேசீயத்தொழில் திட்டம், ஆகியவைகள் அமுல் நடத்தப்படுவதைத் தடுக்க என்ன முயர்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கிராமீயத் தொழிலும், கதருந்தான் இருக்கவேண்டும் என்றால் காந்தியார் செய்யவேண்டிய முதல் காரியம், விஞ்ஞான யந்திர சாதனங்களைக்கொண்ட பெரிய தொழிற்சாலைகள், ஏற்கனவே உள்ளவற்றை மூடும்படி இடைக்கால சர்க்காருக்கு உத்தரவிட வேண்டும். செய்வாரா? இல்லையெனில், ஏன் நமக்குமட்டும் இந்த உபதேசம்? நமது மாகாணத்து முதலமைச்சர் மட்டும், ஏன் ஆலைகள் ஏற்படுத்தமாட்டேன் என்று உறுதி கூறவேண்டும்?

வடநாடு, முதலாளித்வத்தில் மூழ்கிவிட்டது. தென்னாடு அதற்கு மார்க்கட்டாகி விட்டது. தென்னாடு நிரந்தரமாக வடநாட்டுக்கு மார்க்கட்டாக இருக்க வேண்டுமானால், இங்கு, தொழிற்சாலை, யந்திர, விஞ்ஞான சாதனம் கொண்ட தொழிற்சாலை வளரக்கூடாது. வீட்டுக்கொரு ராட்டைத் திட்டம் இருந்தால்தான், ஆளுக்கொரு வேட்டி கிடைப்பதும் அரிதாகி, ஆமதாபாத்துக்குக் காவடி தூக்கி, நமது பணத்தை அங்குமூட்டை கட்டி அனுப்பமுடியும்! இதுதான் விளைவாகுமே யொழிய வேறென்ன நடக்கும்.

பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஒன்று கூறுகிறோம், இங்கு ஆலைகளே வேண்டாம், சகலமும் கைத்தறி மூலமே தயாரித்துக் கொள்வோம், ஆனால் வடநாட்டு ஆலைத் துணி இங்கு வர அனுமதிக்கமாட்டோம் என்று பிரகாசம்காருதான் கூறமுடியுமா, காந்தியார்தான் அத்தகைய திட்டத்தை முன்னின்று நடத்த இசைவாரா!

ஆலையூரில் வாசம் செய்து கொண்டு, இருபதாண்டுக்கதர்ப் பிரசாரத்துக்குப்பிறகு, 407 நெசவாலைகள் முளைத்து இருப்பதைக் கண்ணால்கண்டு, வடநாட்டு முதலாளிகள் இதனை மேலும் வளர்க்கவழிவகை செய்வதையும் பார்த்துக்கொண்டு வாளாயிருக்கும் காந்தியார், இங்கு, நமக்கு வீட்டுக்கொரு ராட்டை இருக்கட்டும் என்று உபதேசிப்பது, நியாயம் என்று கூறுகிறீர்களா?

ஆலைகளின் மூலம்தனிப்பட்ட ஆட்களே இலாபத்தை அடைகிறார்கள், ஆகவேதான் காந்தியார் அதனை ஆலகாலம் என்கிறார் என்று கூறுவர். சரி! ஏன், இந்த ஆலைகளையும் இனி ஏற்படவேண்டிய ஆலைகளையும், தனிநபர்களிடம் விடாமல், சர்க்கார் ஏற்று நடத்தக்கூடாது?

ஜெமீன்தார்களிடமிருந்து அவர்கள் பூர்வீகசொத்து—பாத்யதை உள்ளது—என்று என்ன காரணம் காட்டினாலும்—ஏழைகள்வாழவேண்டும் ஆகையால் ஜெமீன்தாரிமுறை ஒழிந்தாக வேண்டும் என்று கூறுவது போல, தனிப்பட்டவர்களின் ஆலைகள் கூடாது, சகலமும்சர்க்காருக்கு—அதாவதுமக்களுக்கு இருக்கவேண்டும் என்று ஏன் சட்டம் செய்யக்கூடாது? எந்தக்கட்சியும் தடைசெய்யாதே! யாரும் குறைகூறாரே! முதலாளிகளின் எதிர்ப்புத்தானே இருக்கும்! அதுஎன்ன, ஏகாதிபத்யத்தைவிட பலமுடையதா! இருக்கட்டுமே! அதன் கோரப்பசிக்குப் பலியாகவும் எத்தனையோ பகத்சிங்குகள் உண்டே! காந்தியார் ஏன், இந்தக் காரியத்தைத் துவக்கக்கூடாது?

தனிப்பட்டவர்கள் இலாபம் பெறமுடிகிறது— உண்மை— அதற்காக ஆலையே கூடாது— என்று கூறுவதா —ஏன் ஆலைகளை அரசாங்கம், ரயில், தபால் போலத்தனி இலாக்கா ஆக்கக் கூடாது என்று கேட்கிறோம்.

உணவு, உடை, எனும்அடிப்படைத்தேவையை, இலாபச் சூதாட்டத்தில் விடாமல் சர்க்கார் தனது பொறுப்பாக்கிக் கொள்வதே முறையாகும். அதைச்செய்யாமல், ஆலையே வேண்டாம் என்று பேசுவது, அதனையும் ஆலையூரில் இருந்தபடி பேசுவது, அதிலும் ஆலை அரசர்களை அவர்கள் இஷ்டப்படி கொழுக்கவிட்டு விட்டுப்பேசுவது, அவர்கள் மேலும்பலமான திட்டம் வகுத்துக் கொண்டிருக்க, அதுபற்றிக்கவனியாமல் தென்னாட்டுக்கு உபதேசிப்பது என்றால் இதன்பொருள்என்ன? நெஞ்சில் கைவைத்துக் கூறக் கேட்டுக்கொள்கிறோம், இதன் விளைவு என்ன ஆகும்! ராட்டினம் ஆடவேண்டுமானால், காந்தியார் அங்குள்ள ஆலைகளை மூடட்டும் முதலில்! அங்கு ஆலை, இங்கு ராட்டை என்றால், பிரகாசம் இணங்கலாம், மூடிவிடுகிறேன் என்றுகூடக் கூறிவிடலாம். சிந்திக்கும் காங்கிரஸ் தமிழர்களைக்கேட்கிறோம், உங்கட்குச்சம்மதமா இது? அங்குசெல்வம், இங்கு வறுமை! அங்குவிஞ்ஞானம் இங்கு வைதிகம்! அங்கு ஆலை, இங்கு ராட்டை! அங்கு முதலாளி, இங்கு பாட்டாளி! அங்கு சுகம் இங்கு துக்கம்!— இந்தநிலையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

மூலப் பிரச்னையைக் கவனிக்காமல், பிரகாசம்காரு பேச்சை நம்பி, திருப்பூரில், ஆலைகள் புதிதாக இனித்துவக்க அனுமதிக்க மாட்டோம் என்று பேசின மந்திரி ராகவமேனன்மீது மட்டும், ஏடுகள் மோதி என்ன பயன்? அவர்மீது குற்றம் சாட்டி என்னப்பிரயோஜனம்? அதோ, ஆலையூரார் உபதேசம் செய்கிறார், 'பக்தர்பிரகாசம் 'ததாஸ்து' கூறுகிறார்—அதைக் கவனியுங்கள் —சூட்சமம் அங்கே இருக்கிறது!

---

## அறிவிப்பு

"திராவிடநாடு" ஏஜண்டுத் தோழர்களிற் பலர் தங்கள்பாக்கியை அனுப்பாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கது. இனிமேல், பாக்கி வைத்திருக்கும் தோழர்கள், பட்டியல்கிடைத்த ஒருவாரத்திற்குள் தங்கள் பாக்கியை அனுப்பாவிட்டால், எவ்விதமுன்னறிவிப்பும் இன்றிப், பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

---

## திருமணங்கள்

கீழ்ப்பெரும்பாக்கம் தோழர் எம். சண்முகம் அவர்கள் புதல்வி எம். எ. நீலாவதி, பி. ஏ., அவர்களுக்கும் தோழர் எஸ். சுப்ரமண்யம் B. A. B. Sc., அவர்களுக்கும் 8—9—46ல் நடந்த திருமண நினைவாகத் 'திராவிடநாடு' இதழுக்கு ரூ. 10, அன்பளிப்பு வழங்கப்பட்டது.

மாத்தூர்த் தோழர் சு. துரைசாமிக்கும் தோழியர் மங்களத்திற்கும் 9–9–46ல் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்த நினைவாக ரூ. 2, 'திராவிடநாடு' வளர்ச்சிக்குத்தரப்பட்டது.

திருவத்திபுரம் தோழர் சி.வே. சுப்பிரமணியம் அவர்களுக்கும் தோழியர் பார்வதியம்மைக்கும் 9—9—46-ல் நடைபெற்ற சீர்திருத்த மணத்தின் நினைவாகத் "திராவிடநாடு" இதழுக்குரூபா 2—0—0 தரப்பட்டது.

8–9–46ல்சென்னையில்தோழர் நடராசனுக்கும் தோழியர் வடிவாம்பிகைக்கும்நடைபெற்ற சன்மார்க்க வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக ரூபா. 2–0–0 "திராவிடநாடு" வளர்ச்சிக்குத் தரப்பட்டது.

### பிறப்பு

தூத்துக்குடி, மேலச்சண்முகபுரம், திராவிடகழகத் தோழர் ஏ. வேதநாயகம் வாழ்க்கைத் துணைவி சித்திரக்கனி அம்மாளுக்கு 25—9—46-ல் பெண் குழந்தைபிறந்தது தாயும் சேயும் நல்ல சுகம். குழந்தைக்கு தமிழ்கொடி என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

### சரியான திட்டம்

முதியவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், கட்டாய ஆரம்பக் கல்வி பரப்புவதற்கும், பம்பாய் சர்க்கார், புதியதோர் வேலைத் திட்டம் தீட்டுவதாக அறிந்து மகிழ்கிறோம். இனி, சர்வகலாசாலையில், 'பட்டம்' பெறும் மாணவர்கள், ஒரு குறிப்பிட்ட அளவாவது, எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தால்மட்டுமே, அவர்கள் (B. A., M. A.,) முதலிய பட்டம்பெறமுடியும். இதற்கான முறையில் பம்பாய் சர்வகலாசாலைச்சட்டத்தை திருத்தப்போகிறார்கள். குறைந்தது ஆறுமாதகாலம், கட்டாய ஆரம்பக்கல்வி பரப்பும் வேலையை இந்த மாணவர்கள் செய்தாக வேண்டும்.

இந்தத்திட்டத்தை நாம் வரவேற்கிறோம். சென்னை சர்க்காரும் இதுபோன்றே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

# மதுவிலக்கு வெற்றிபெற உதவுங்கள்

## ஆலையூரார்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆகவே, புள்ளிவிவரம் கூறுகிறது, வெளிநாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தகோடிக் கணக்கானபணம், இங்கேதங்கி விட்டது என்பதையும், அந்தப் பணம், ஆலைக்காரர் இடம் போய்ச் சேர்ந்ததையும், வடநாடு ஆலையூர்என்பதையும். இதனை அனைவரும் அறிவர்.

ஆலையூரார், ஆலைகள் மூலம், கோடி கோடியாக இங்குள்ள பணத்தை எடுத்துச் செல்லும், வடநாட்டு முதலாளிகளுடன், மில்காரருடன் குலவிக்கொண்டு அதுதான் அகிம்சை என்றும் கூறிக்கொண்டு, அதேபோது ஆலைகள் விஷம்,கதரேகதிமோட்சம் என்றும் பேசிக்கொண்டு, பிரகாசத்திடம்அதனையேஉபதேசம் செய்கிருர், அவரும்,

"ஆலை வேண்டேன், ஐயா?
உள்ளதையும் மூடி விடுவேன் மெய்யாய்!"

என்றுபாடுகிருர், இது எந்த வகையான நியாயம்? என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

காந்தியாரோ ஆலைகள் ஆலகாலம் என்கிருர்; சர்க்காரும் அதனை இன்று நடத்தும் பண்டிதரும், கொண்டுள்ள திட்டமோ முற்றிலும் வேறு. ஆச்சரியம், சீடர்கள் குருவின் திட்டத்தை கைவிட்டது கூட அல்ல, குரு, சீடர்களின் பதட்டத்தைக் கண்டிக்காது இருப்பது தான்! அதனினும் ஆச்சரியம், அந்தச் சீடர்கள், குரு உபதேசத்தைப் பிரகாசம்காரு மூலம் நமக்கு அனுப்பிவிட்டு, தாங்கள் ஆலைகளைப் பெருக்கிக் கொள்வது தான்.

ஆலைகளை விருத்தி செய்யவும், நெசவுத்தொழிலின் போக்கை நவீன மயமாக்கவும், ஆடைஉற்பத்தியின் அளவை அதிகரிக்கவும் திட்டமிட்டிருக்கிருர்கள்—அதற்காவன செய்தும் வருகிருர்கள். 1950-51-ல், ஆலைகள் மூலம், 7200,000 000 கெஜம் துணி தயாரிக்கத் திட்டம் வகுத்து வேலை செய்யப்பட்டுவருகிறது.

பண்டித ஜவஹர்லாலைத்தலைவராகக் கொண்ட தேசீயத் தொழில் திட்டக்கமிட்டியும், இதற்கு ஆதாவுதந்திருப்பதுடன் இப்போது மக்கள் உபயோகத்துக்குக் கிடைப்பதைவிட, இரண்டுமடங்கு அளவுதுணி இனிக் கிடைக்க ஏற்பாடுசெய்யவேண்டும், என்ற நோக்கத்தைத் தெரிவித்திருக்கிறது. அந்த நோக்கம் ஈடேறும் முறையிலே நெசவுத் தொழில் வளரவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது – நெசவுத் தொழில் வளருவது என்ருல் காந்தியார் கூறிஞரே, ஆலைகாலம், அந்த ஆலை முறைதான்.

பண்டிதஜவஹர் 'என்வார்சு' என்கிருர் காந்தியார்.

"வார்சு" தயாரிக்கும் திட்டமும், காந்தியாரின் ராட்டைமார்க்கமும், ஒன்றல்ல! வேறு வேறு! வேறு வேறு மட்டுமல்ல, முரண்!

மற்றநாட்டு மக்கள் உபயோகிக்கும் துணி அளவுக்கும், நம் நாட்டு உபயோகத்துக்கும் வித்யாசம், குறிப்பிடத்தக்கதுமட்டுமல்ல — விசனிக்கத் தக்கதாக இருக்கக் காணலாம்.

சராசரி வருஷவாரியில்
ஒரு ஆள்உபயோகிக்கும் ஆடை.

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 64 | கெஜம் |
| ஸ்வீடன் | 38 | " |
| அர்ஜெண்டிஞ | 38 | " |
| டென்மார்க் | 34 | " |
| நியூஜிலந்து | 30 | " |
| கனடா | 28 | " |
| ஆஸ்திரேலியா | 27 | " |
| தென்ஆப்பிரிக்கா | 33 | " |
| மலாயா | 22 | " |
| இந்தியா | 15 | " |

சீமையிலே இருந்து இறங்கினவன் போல உடுத்திக்கொள்ள வேணுமோ! என்று கேட்பீர்களே என்றே சீமைமக்கள் உபயோகிக்கும் துணி அளவு தரவில்லை—வேறு நாட்டின்புள்ளி விவரத்தை மட்டும் தந்திருக்கிரேம்.

இப்போது 15-கெஜம், வருஷவாரியில்

தேசீயத்தொழில் திட்டக் கமிட்டியார், குறைந்ததுஆண்டுதோறும், சராசரி ஒரு ஆளுக்கு 30-கெஜம் துணி கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்கிருர்கள்.

இதற்காக என்ன செய்கின்றனர், வடநாட்டார்? நமது மாகாண முதலமைச்சர்போல, "வீட்டுக்கொரு ராட்டை"யா தருகிருர்கள்! நாட்டுக்கொரு கூட்டமாக நிபுணர்களை அனுப்புகிருர்கள், நெசவுத் தொழிலிலே, என்னென்ன புதுமுறையான "மெஷின்" கிடைக்கும், என்று பார்த்து வாங்கிவரும்படி அனுப்பியிருக்கிருர்கள்.

இந்தியாவுக்கு வெளிநாடுகளிலே மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது இடைக்காலசர்க்கார் ஏற்படுவதற்கு முன்பே உண்டாகி விட்டநிலைமை. இடைக்காலசர்க்காரையோ அதிலே அங்கம் வகிக்கும்தனிநபர்களின் சொந்தத்திறமை-தகுதியையோ மட்டமாக்கிப் பேசுவதற்காக அல்ல இதனைக் கூறுவது. தனிப்பட்டவர்களின் திறமை–தகுதியாகியவற்ருல் அல்ல இந்தமதிப்பு. இந்தியாவின் செல்வநிலையும் தொழில் நிலையும் உயர்ந்துவிட்டது—பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே 1500 கோடி ரூபாய்க்கு மேல் இந்தியாவிடம் கடன்பட்டிருக்கிறது. எனவே சர்வதேச ஸ்தாபனங்களிலேஇந்தியாவைச் சாதாரணமாகக் கருதிவிடமுடியாது. இந்தப்புதிய அந்தஸ்தைத் துணைகொண்டு, வடநாட்டுவியாபாரக் கோமான்கள், நிபுணர்களை எங்கும் அனுப்பி, தொழில் வளத்துக்கான தகவல்களைத் திரட்டி வருகின்றனர். இன்று வடநாட்டு வணிகர்களின் தூதுவர்கள் இல்லாத வெளிநாடே இல்லை. பக்தாதிலிருந்து பாரிஸ் வரையிலே, நியூஜிலாந்திலிருந்து நியூயார்க் வரையிலே, உள்ளனர். உலகிலுள்ள கோடீஸ்வரர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர்—குறிப்பாக அமெரிக்கக் கோடீஸ்வரர்களுடன், கூட்டுக் கம்பெனிகள் நடத்தும் திட்டம் வலுத்துவருகிறது.

காந்தியார், இங்கு கதர்திட்டம்,கிராமக்கைத்தொழில்ஆகிய வற்றைப்பற்றிப் பேசுவது கேட்டு, இங்கு நூற்றல்போட்டியும், கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல் முதலியன நடைபெற்றுவருகிற நேரத்தில், வடநாட்டுப்பணக்காரர்கள்,மேஞட்டுகளில் புகுந்து, விஞ்ஞானத்தை அழைத்துக்கொண்டு வருகிருர்கள் தங்கள்தொழிலுக்குத்துணை புரிய.

இங்கு நாமெல்லாம் காந்தியார் கூறுகிறபடி, ராட்டையின் கீதத்தைக் கேட்டுரசித்துக் கொண்டிருந்த சமயம், காங்கிரசாருக்கு அரசியல் அதிகாரம் கிடைக்காத சமயம், அந்தச்சமயத்தில், அரசியல் இந்தியாவை அலட்சியப்படுத்திய பிரிட்டன், பொருளாதார இந்தியாவுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தது. பண்டித ஜவஹர்வைசிராய் மாளிகையில் விருந்துண்ணுமுன்னமேயே, இந்தியக் கோடீஸ்வரர்கள்—காங்கிரஸ் அன்பர்கள்—வைசிராயிடம் ஆசிபெற்றுச் சீமைசென்று, அங்கு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால் வரவேற்கப்பட்டனர்.

1944-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம்தேதி, இந்திய யந்திரக் கைத்தொழிலாளர்களின் தூதுக்கோஷ்டிசீமைக்குப் புறப்பட்டது.

டாட்டா,
பிர்லா,
நளினிரஞ்ஜன்சர்க்கார்,
ஷாராப்,
சர். சுல்தான் செனுய்,
லயிக் அலி,
அஜாய்ப்சிங்,

ஆகியோர்கொண்டது அந்தத் தூதுக்கோஷ்டி. இதுகிளம்பும்போது, காந்தியார் உட்படப் பலரும், இந்த முதலாளிகள் இந்தியாவைக்காட்டிக்கொடுத்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வதற்காகவே போகின்றனர் என்று கொதித்துக் கூறினர். பிர்லா ஒரு மறுப்பறிக்கை விட்டார்—அவ்வளவு தான்—காந்தியார் தமது கோபத்தை மாற்றிக்கொண்டு, தூதுக் கோஷ்டிக்கு ஆசி கூறிஞர். மேமாதம் மூன்ருவது வாரம் சீமைபோய்ச் சேர்ந்தது தூதுக்கோஷ்டி. ஐந்துவாரகாலம்பிரிட்டனில்தங்கி, காணவேண்டியதைக்கண்டு, பேசவேண்டியதைப்பேசி விட்டு, அமெரிக்கா சென்று ஆறுவாரகாலம் தங்கி, அங்கும் அவசியமான அலுவல்களை முடித்துக் கொண்டு, இந்தியா திரும்பினர். தனிப்பட்ட முறையிலே, எந்தத் தனவந்தனும் இதுபோலப் போகலாம், ஆனல் ஒரு சர்க்காரின் ஆசியுடனும், ஒருமகாத்மாவின் ஆசியுடனும், ஒருபலமான அரசியல் கட்சியின் ஆசியுடனும்,கோடீஸ்வரர்கள்சென்ருல், அந்தமதிப்பே வேறுதான்—அதுஎந்தக்கதவையும் திறந்திருக்கும் — அரசியல், பொருளியல் ஆகிய இருதுறைகளிலுமுள்ள, பல்வேறுநாட்டு முக்கியஸ்தர்களிடம் பரிவுகாட்டிச் சொந்தம் கொண்டாடிப் பேசமுடியும். அது போலத் தான் நடந்தது.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய தூதுக்கோஷ்டி, தன் அபிப்பிராயத்தை ஒரு அறிக்கையாக்கி வெளியிட்டது. என்ன அதன் கருத்து? காந்தீயபோதனைக்கு நேர்மாறு!

"வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்று நமதுமக்கள் விரும்புகிருர்கள், அது நியாயமானவிருப்பம்; அதற்காகப்பாடுபடுகிருர்கள்; அவசியம். விஞ்ஞான அறிவு தரும் சாதனங்களைப் பெருவாரியாகப் பயன்படுத்திக்கொண்டு, யந்திரங்களைக்கொண்டு நடத்தப்படும் பெரிய தொழிற்சாலை முறையை நாட்டிலே புகுத்திஞல் தான், இன்று வறுமையிலும் வாட்டத்திலும் சிக்கி உழலும்மக்கள்சுகவாழ்வு பெறமுடியும். இதுஎங்கள் ஆழ்ந்தநம்பிக்கை. இப்போது வெளிநாடுகள் போய்த் திரும்பியுள்ளோம், இந்த நம்பிக்கை மேலும் பலமாகிவிட்டது!!"—என்று அறிக்கைவெளிவந்தது, கிராமீயத்தொழில்கள், கைராட்டைத் திட்டம், ஆகியவைபற்றி 'பஜனை'யேநடத்தும் காந்தியார், தம்முடைய மூலாதாரத்திட்டத்தையே முறியடிக்கும் முறையிலே, முதலாளிமார்கள்வெளியிட்ட அறிக்கையைக் கண்டித்தாரா? இல்லை! ஏன்? அந்தக் கேள்விக்குப்பதில், வேறு கட்சியாளராகிய நாம் கூறுவதைவிட, காந்தியாரின் சொந்தக் கட்சியினரே சிந்தித்துப்பார்த்துக் கூறட்டும். அது தான் முறை.

முதலாளிகள், "பம்பாய்த்திட்டம்" என்ற பிரம்மாண்டமான பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தனர்.

பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றனர்.

விஞ்ஞான, ரசாயன, யந்திர முறைகளையும் திட்டங்களையும் பற்றிக்கலந்து பேசினர்.

தொழில் துறையையந்திரமயமாக்கியே யாகவேண்டும், மக்கள் வாழ்க்கைஉயர அதுதான் வழிஎன்றுஅறிக்கை விடுத்தனர்.

இயற்கைச் செல்வத்தை, இம்முறையில் பயன்படுத்தி, வளத்தையும் வாழ்க்கையையும் விரு

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆலைபூரார்

5-ம் பக்கத் தொடர்ச்சி

த்திசெய்ய வெளிநாட்டிலிருந்து "கடன்" வாங்கலாம் என்று கூறினர்.

குறிப்பாக ஒரு 700-கோடி ரூபாய் கடன் வாங்கலாம் என்றனர். அதாவது பிரிட்டன் தரவேண்டிய 1500 கோடி திரும்பிக்கிடைப்பது மட்டும் போதாது — மேற்கொண்டு நாமே கடன் வாங்கவேண்டும் 700-கோடி. இந்தக்கடனை, அமெரிக்காவிடமிருந்து பெறுவது நல்லது என்றனர்.

இந்தக்கடன் தொகைக்கு நவீனமயமான, விஞ்ஞானசாதனங்கள் அடங்கிய அபூர்வமான யந்திரங்களை வாங்கி, இந்தியத் தொழிற்சாலைகளுக்கு அமைக்கலாம் என்றனர்.

அவ்விதம் வாங்கும் யந்திரங்களையும், அமெரிக்காவில் வாங்குவது நல்லது என்றனர்.

இவைகளுக்கான திட்டம் தயாரித்துள்ளனர்.

இவ்வளவுக்கும் பிறகு காந்தியார் கூறுகிறார், ஆலை, ஆலகாலம் அது ஆகாது என்று. அதனையும் நமக்குக் கூறுகிறார்! ஏன்?

அமெரிக்க மார்க்கட்டில் கடன்வாங்கி, அதைக்கொண்டு யந்திரம்வாங்கி, அதைக்கொண்டு இங்கு தொழிலை விருத்திசெய்ய வேண்டுமென்று முதலாளிமார்கள் கூறும் அதேபோது, அங்கே, அமெரிக்காவிலே உள்ள முதலாளிகள், முன்னேற்றமடையாத நாடுகளுக்கு நாம் தான் முன்னேற்றப் பாதையைவகுத்துத்தரவேண்டும், விடுதலைபெறாத இந்தியாவைக் காண நாங்கள் விசாரப்படுகிறோம், அந்தநாட்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எங்கள் உள்ளம் துடிக்கிறது, எம்மிடம் உள்ளபணம் வேண்டுமா, தாராளமாகக்கடன்தருகிறோம், யந்திரம் வேண்டுமா, தருகிறோம், இவ்வளவு சிரமம்கூட வேண்டாம், கடன் வாங்குவானேன் திருப்பித் தருவானேன், உங்களுக்குத் தேவையானயந்திரம், நிபுணர்கள், விஞ்ஞான சாதனம் இவ்வளவும் தருகிறோம், பெற்றுக்கொண்டு உங்கள் நாட்டிலே, நீங்களே தொழிலை நடத்துங்கள், நாங்கள், கூட்டாளிகளாக, பங்காளிகளாக இருக்கிறோம், என்றுவலியவலியக் கூறுகின்றனர். எவ்வளவு பரஸ்பரம் பாருங்கள்! கதிரவன் உதிப்பதெங்கே, கமலமெங்கே! களித்து மலர்ந்திடுவது காண்கிறோமே. அதுபோல இங்கு முதலாளிகளின் மனம் நாடுவதை, அமெரிக்க முதலாளிகள் குறிப்பாலறிந்து தந்துதவமுன் வருகின்றனர். 700 கோடியோடு விடுவதாக இல்லை! எந்தத்தொழிலிலும், 'பாகம்' இருக்கவேண்டும், என்பது அமெரிக்கத்திட்டம்.

இது வெறும் கற்பனையல்ல இதோ ஆதாரம்.

அமெரிக்க, பொருளாதார அபிவிருத்திக் கமிட்டியைச்சார்ந்த வெஸ்ட்மோர் வில்காக்ஸ் என்பவர், எட்டுமாதகாலம் இந்தியாவில் தங்கிஇருந்து இங்குள்ள தொழில்முறை, அதன்வளர்ச்சி, தேவைகள், ஆகிய வற்றைக் கணக்கெடுத்தார். பிறகு, இந்தியாவினிடம் அமெரிக்கா ஆசைகொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியபிரசாரத்தில்இறங்கினர். "இன்னும் ஒருபத்தவருஷங்களிலே இந்தியாவுக்கு, உன்னதமான இடம் கிடைக்கப் போகிறது, இந்தச்சந்தர்ப்பத்தில் நாம், இந்தியாவுக்கு உதவி செய்து அதன் அன்பைப் பெறுவதல்லவா முறை" என்கிறார் வில்காக்ஸ். என்னஉதவி? 700 கோடியும், கூடுமானல் அதற்கு மேலும்!

வெளிநாட்டுக்குச் சென்று நமது செல்வத்தை ஏராளமாகக் கொட்டித் தொழில் நடத்துகிறோம் இலாபத்துக்கு. நமக்கு இலாபம் என்றுதெரிந்தஉடனே, உள்நாட்டுக்காரன், அன்னியன் சுறண்டுகிறான், கொள்ளையடிக்கிறான் என்று கிளம்புகிறான், உடைமைக்கும் உயிருக்கும், கீர்த்திக்கும் ஆபத்து ஏற்படுகிறது. நாம் ஏன் வீணுக, ஓடிஆடி வெளி இடங்களிலே, தொழில்களை ஏற்படுத்தித்தொல்லைப்படவேண்டும் யாராவது கடன் கேட்டால் கொடுத்துக்கொண்டு சுகமாக இருக்கலாம், என்ற எண்ணம் ஏற்பட்டது அமெரிக்கர்களுக்கு முதலில். அந்தருசி பார்த்தான பிறகு, கடன்கொடுப்பானேன். கூட்டுத்தொழிலே நடத்தலாம். உள்நாட்டுக்காரனையே தொழிற்சாலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லலாம், தொல்லையும் கிளர்ச்சியும் நம்மை ஒன்றும் செய்யாது, இலாபத்துக்கும் குறைவு இராது, செல்வாக்கும் வளரும், என்று, இப்போது அமெரிக்கா அதன்போக்கைமாற்றிக்கொண்டது.

இதற்கு அனுகூலமான நிலைமையைக்கண்டறியவே, வெஸ்ட்மோர் வில்காக்ஸ், எட்டுமாதம் தங்கிஇருந்து இந்தியாவைக் 'கட்டிக்கரும்பே! கண்ணேமணியே' என்றுகொஞ்சிப்புகழ்கிறார் இதற்குப்பலன் ஏற்படாமல் போகவில்லை.

"இந்தியவிடுதலைச்சங்கம்" என்று அமெரிக்காவில் ஒருசங்கம் இருக்கிறது. அதற்குத் தலைவராக ஸ்திரீ தாணி என்பவர் இருக்கிறார். அவர், அமெரிக்கருக்கு இந்தியவிடுதலையிலே உள்ள அக்கரையையும் அன்பையும் பாராட்டி உருகுகிறார், உருகுவதோடு நின்றாரா? உள்ள விஷயத்தையும் ஜாடையாகக் காட்டுகிறார். "இந்தியா விஷயமாக அமெரிக்கத்தொழிற்சாலை முதலாளிகள் கொண்டிருந்த கருத்தை மாற்றிக்கொண்டுள்ளனர். இந்தியாவுடன் நேரடியாக, பணமூலமாகவும் பொருளாதாரத்துறையிலும் தொடர்புவைத்துக்கொள்வது இருநாடுகளுக்கும் நல்லதுஎன்பதைத்தெரிந்துகொண்டுள்ளனர்," என்று கூறுகிறார்.

இதன் கருத்தஎன்ன? இருஇடத்து முதலாளிகளும் ஒப்பந்தத்துக்கு வேலைசெய்கிறார்கள்; அதற்கு, மக்கள் உழைத்து, கஷ்டநஷ்டங்களை ஏற்றுக் கொண்டுவளர்த்த தேசியஅந்தஸ்த்தைப் பலியிடுவது என்று பொருள்.

இதற்கோ நமது உழைப்புபயன்படுவது என்று நினைத்து, தேசபக்தர்களின் நெஞ்சம் புண்படுமே என்பது பற்றி முதலாளிகட்கு எண்ணம் என் வரப்போகிறது? அல்லது, எந்தக் காந்தியாரின் சீடர்கள் என்று கூறிக்கொள்கிறோமோ, அவருடையதத்துவத்துக்கு நாமே உலைவைக்கிறோமே என்பது பற்றித்தான் அவர்களுக்கென்ன அக்கரை? யாராரிடமிருந்து, என்னென்ன வகையான செல்வாக்கைத்தங்கள் சுயகாரியத்துக்குப்பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது பற்றித்தானே அவர்களின் சிந்தனை இருக்கும்.

இயற்கை, பலபொருள்களை வழங்குகிறது — பயன்படுத்திக் கொள்கிறார்கள். வறுமையின் காரணமாக, மிகக் குறைந்த கூலிக்குவேலை செய்யும் தொழிலாளர் தொகை தொகையாகக்கிடைக்கின்றனர். பயன்படுத்திக்கொள்கிறார்கள். தியாகத்தீயிலேநின்று தவித்துத தேசியபலத்தை வளர்த்திருக்கிறார்கள், நாட்டுக்குழைப்போர் —பயன படுத்திக் கொள்கிறார்கள். மேனாட்டு ஏடுகளைப்படித்து, புத்தலகக்கருத்தைப் பெற்றுள்ளனர் அறிஞர்கள்—பயன் படுத்திக்கொள்கிறார்கள். தன்னிடம்உள்ள மலைமலையான நிதியைக் கடனாகக்கொடுக்க அமெரிக்கா தயாராக இருக்கிறது—பயன்படுத்திக்கொள்வோம், பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிகள், தங்களுடையசெல்வமும் சிதையாமல் செல்வாக்கும் பாழ்படாத விதமாகக் கூட்டுத் தொழில் நடத்தவிரும்புகிறார்கள் —பயன்படுத்திக்கொள்கிறார்கள். இங்ஙனம், கிடைக்கும் சக்தி, அவ்வளவையும் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு பணத்தைக் குவிக்கின்றனர் வடநாட்டு முதலாளிகள்.

1945-ல், மேனாடு போய் வந்ததோடும், நின்றுவிடவில்லை, அவர்களின்வேலை. அந்தக்காரியம் தொடர்ந்துநடைபெற்று வருகிறது.

அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பிலே, மற்றுமோர் தூதுக் கோஷ்டி கிளம்பி விட்டது, மீண்டும், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் சென்று, நவீனயந்திரசக்திகளைப் பெறுவதற்கான வழிதேடிக்கொள்ள. இங்கு காந்தியார், கதர் நூல் இழையிலே இராமர் நர்த்தனமாடுவதைக் காண்கிறார்; அவர்களோ, மான்செஸ்டர் நியூயார்க் போன்ற நகர்களிலே உள்தொழிற்சாலைகளிலே இயங்கும்யந்திரங்களின் ஓட்டத்திலே, அகில உலகையும் ஆட்டிப்படைக்கும் பணம் ஆடுவதைக் காண்கின்றனர். 1946, ஜுலைமாதம் 8-ந்தேதி இந்தத்தூதுக் கூட்டம் சீமைசேர்ந்தது — அங்கு பார்க்க வேண்டிய அலுவலை முடித்துக்கொண்டு அமெரிக்கா செல்கிறது. சாமான்களைப் பார்வையிடுவதுமட்டுமல்ல இதன்வேலை — பல முதலாளிகள், சாமான்களை வாங்கிவரும் அதிகாரம் அளித்து அனுப்பி இருக்கிறார்கள். இங்கு காந்தியார், மாலைபஜனைக்குப்பிறகு கதரின் மேன்மையைப்பற்றி உபதேசித்துக்கொண்டிருக்கிறார். தூதுக்கூட்டம் துரைமார்களுக்கும் மார்வாடிகளுக்கும் "சௌஜன்யமான" ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளனர்!

போயிருக்கும் தூதுக்கூட்டத்தின் தலைவர், சர். எம். விஸ்வேஸ்வரய்யர்! இவரே அகிலஇந்திய உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர். டாட்டா கம்பெனியின்டைரக்டர்.

பாரத்யந்திரக் கருவிக்கம்பெனியின் தலைவராகவும், இன்டர்நேஷனல் பாங்க் ஆப்இந்தியாவின்துணைத் தலைவராகவும், பம்பாய் நூல்மார்க்கட்டை ஸ்தாபித்தவரும், இந்தியசர்க்காரின் ஏற்றுமதி ஆலோசனைசபையில் இருந்த வருமான, கோவர்தன் தாஸ் சாஹா, என்பவரும் இதில் இருக்கிறார். வங்காள—பர்மாஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் தலைவர் பி. எஸ். எஸ். ஹாஜி போயிருக்கிறார்.

பட்டு, செயற்கைப் பட்டு பீங்கான் மின்சாரயந்திரங்கள் ஆகியவற்றின் தொழிற்சாலைகள் பலவற்றிலே, டைரக்டராக உள்ள, முரார்ஜீ வைத்யா சென்றிருக்கிறார்.

கான்பூர் ஆர். ஜீபஞ்சாலை டைரக்டர் பி. ரன்ஜித்சிங் தூதுக்கூட்டத்தில் ஒருவர்.

என்ஜினியரிங் சாமான், மின்சார சாமான், போன்றபலவற்றை உற்பத்தி செய்யும் 14 கம்பெனிகளில் பாகஸ்தராகவோ, டைரக்டராகவோ உள்ள பீஹன் தாஸ்கூப்தா இந்தக்கூட்டத்தில் சேர்ந்திருக்கிறார்.

பல, கம்பளிஉடைதயாரிக்கும்ஆலைகளில் டைக்ரடராகஉள்ள, ஹன்ஸ் ராஜ்தான்டா, கல்கத்தா முதலாளி ஹாஜி ஹம்தாஜுதமல்லிக், பாங்க் தொழிலிலிருந்து சாயக்கம்பெனி வரையில். பல கம்பெனிகளில்டைரக்டராகஉள்ள கங்காதர் விஷ்ணுபுராணிக் என்பவர்களும் போயிருக்கின்றனர். இவர்களில் நமது மாகாணத்தின் தொழிலபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்கள், யாரிருக்கிறார்கள்? இவர்கள் சேகரித்துவரப் போகிற நுண்ணறிவு அவ்வளவும், நவீன சர்தனங்கள் யாவும், யாருக்காக? இதனை எண்ணிடமறுப்பது, நாம் வாழும் இடத்தின் எதிர்காலத்தைப் பற்றி எண்ண மறுப்பதாகுமே! இவர்களெல்லாம், "வீட்டுக்கொரு ராட்டை"த் திட்டத்துக்காகவா போயிருக்கிறார்கள்!

இங்கிருந்துமுதலாளிகள்தூதுக்கூட்டம்போவதுபோலவேஅமெரிக்கமுதலாளிகளின் தூதாக, வெஸ்ட்மோர் வில்காக்ஸ் இங்கு வந்துபோனர். இவர், முதல்தடவை முதலாளிகள் 1944ல் போய்வந்ததற்கும், இப்போது முதலாளிகளின்தூதவர்கள் 1946ல் கிளம்பியிருக்கிறார்களே, இதற்கும்இடைக்காலத்தில் வந்தார். இவர் வருவதும், இடைக்கால சர்க்கார் இங்கு அமைவதும் ஏறத்தாழ ஒரேசமயமாக இருக்கிறது, இவைகள், ஒரேசங்கிலியின் பலவளைவுகள் என்பது, சங்கிலி பலமாக நம்மைப் பிணைத்துக்கொண்ட பிறகேதெரியம்; முன்கூட்டிச்சொல்லும் நாம்சந்தேகிகளால் கண்டிக்கத்தான்படுவோம்.

அமெரிக்கர்மட்டுமல்ல இங்கு ஆள் அனுப்பியது. பிரிட்டிஷாரும்அனுப்பினர். அரசியல் காரியத்துக்காக சர். ஸ்டாபோர்டுகிரிப்சை அனுப்பினர்களே அவருக்கு பிரிட்டிஷ் சர்க்காரில் என்னவேலை? வியாபாரபோர்டுத் தலைவர். இங்கு வருவதற்கு முன்னதாகவே, அவர், பிரிட்டனில், குறிப்பாக லங்காஷயரில் உள்ள நெசவாலைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்ந்து கூறும்படி ஒரு கமிட்டி நியமித்து. அதற்கு முன்பு இந்திய சர்க்காரில் பொக்கிஷ மெம்பராக இருந்த சர். ஜார்ஜ் ஷுஸ்டர் என்பவரைத் தலைவராக்கினர். உலக மார்க்கட்டில், மீண்டும் லங்காஷயர் எப்படி ஆதிக்கம் செலுத்துவது என்று ஷுஸ்டர் ஒரு ஆராய்ச்சி அறிக்கைவெளியிட்டார். அத்துடன்

(A பக்கம் பார்க்கவும்)

## ரங்கோன் ராதா

1-ம் பக்கத் தொடர்ச்சி


டைய காலிலேயே விழுந்துமன்னிப்புக்கேட்டுக் கொண்டான் என்று. என் ஆசையைக்கதையாக்கிச். சொன்னேன். நான் பெண்களை, ஆண்கள்கொடுமை செய்வதைப்பற்றிச் சொன்னபோதெல்லாம், சுவாரஸ்யமாக இருக்கும், வேலைக்காரியின் பேச்சு.

"அவள் பாபம் சாது; வீண் ஜோலிக்குப் போகிறவளல்ல; தன்புருஷனே தெய்வம் என்று எண்ணிக்கொண்டு, அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள். அவள் அவ்வளவு அன்பாக இருந்தாள், அவள் புருஷனோ, அவளுடைய அன்பை மதிக்கவில்லை; அவளைப் பிரியமாக நடத்துவதில்லை; எப்போதாவது கொஞ்சிக்குலாவுவான், குச்சி நாய்க்குட்டியிடம் கோடீஸ்வரன் எப்போதாவது ஒரு நாள் கொஞ்சமாட்டானா, அதுபோல. ஆனால் அவனுடைய மனமோ எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தது" என்றுநான் சொல்வேன்; உடனே சூது வாதறியாத வேலைக்காரி, "படுபாவி! கல்நெஞ்சக்காரன்!" என்று கதையிலே வரும்ஆணைச் சபிப்பாள், ஆணைத் திட்டுவாள். உடனே நான், "அதோ கூடத்திலே இருக்கிறாரே, ரொம்ப யோக்யஸ்தரோ அவர்" என்று சொல்வேன், வேலைக்காரியோ பதில் பேசமாட்டாள், கதையைச் சொல்லும்படி தூண்டுவாள்.

"இந்தமாதிரியான ஆண்களை வழிக்குக் கொண்டுவரமுடியும். பெண்பிள்ளைகள் பைத்யக்காரத்தனமாக இதுவரையில் இருந்துவிட்டார்கள். ஆண்பிள்ளையின் விளையாட்டுப் பொம்மையாகிவிட்டார்கள். அவர்களுக்கும் மானம் மரியாதை சூடுசொரணை உண்டு என்று காட்டியிருக்க வேண்டும்." என்று நான்காரசாரமாகச் சொன்னபோது, அவள் பயந்தேபோனாள். பிசாசு பேசுகிறது என்றுகூட எண்ணிக் கொண்டிருந்திருப்பாள். பெருமூச்சுடன் "என்னம்மா செய்வது! தொட்டுத்தாலிகட்டினவன் இட்டவேலையைச் செய்வதுதானே நம்மவிதி" என்று அவள் கூறியபோது நான், "போடி! பெண்களும் சரி, ஆண்பிள்ளைகளும்சரி, அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தாலி கட்டினான்னடியம்மா! அது என்னமாட்டுக்கு மூக்குக் கயிறு போடுவதுபோலவா! தாலி கட்டினான் என்றால், ஒருவீட்டுப்பெண்ணை, சுகமாக, கௌரவமாகக், காத்துரட்சித்து வருகிறேன் என்று சத்தியம் செய்துகொடுத்தது என்றுதானே அர்த்தம். நேர்மாறாகப் புருஷன்நடந்துகொண்டால், துரோகம் செய்தால், அவன், சண்டாளன்தானே என்று கோபமாகச் சொன்னேன். என்ன பதில் சொல்வது என்று தோன்றாமலே திகைத்தாள் வேலைக்காரி. பாவம்! அவள் தன்புருஷனிடம் பட்ட அடியும் உதையும் எவ்வளவோ!!

"அடங்கி அடங்கிப் போனால் பயன் கிடையாதடி. அழுதாலும் பிரயோஜனம் இல்லை. அடங்காப்பிடாரி வாயாடி, துஷ்டை என்று எவ்வளவு கெட்டபெயர் வந்தாலும் சரி என்று துணிந்து, புருஷனின் போக்குக்கு எதிர்ப்புக்காட்டினால், ஒருதடவை இரண்டு தடவை, அடித்துப்பார்ப்பான், உதைத்துப் பார்ப்பான், பிறகு பெட்டியிலிட்ட பாம்பு தான்" என்று அவளிடம் போர்த்திட்டமேகூறினேன். அவள்மேலும் திகைத்துப் போனாள். "இதோ பாரடி! என்வீட்டுக்காரர்கூட, என்னை என்னமோ வாய்செத்தவள், மிரட்டி உருட்டி அடக்கிவிடலாம் என்று எண்ணிக்கொண்டு, நான் இருக்கும் போதே, வேறு ஒருவளைக்கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறார். அந்தக்கலியாணம் நடக்கப் போகிறது என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். பார், நடக்கப்போகிற வேடிக்கையை. கலியாணமணையிலே, மாப்பிள்ளைக் கோலத்திலே அவர் உட்காரட்டுமே, அப்போது தெரிகிறது, ரங்கம் எப்படிப்பட்டவள் என்று. ஆயிரம்பேர் கூடிஇருக்கட்டும் அந்தக்கலியாண வாசலில், அப்படியே பாய்ந்து சென்று கலியாணத்துக்கு 'ஓமம்' வளர்த்துகிறார்கள் பார், அந்த நெருப்பை எடுத்து அவர் கண்ணிலே கொட்டாவிட்டால், என்பெயர் ரங்கமல்லடி! பார், நடக்கப்போகிற கூத்தை!" என்று நான் ஆக்ரோஷத்துடன் சொன்னேன். கடுகிசி; எனக்கோ பிரமாதமான கோபம். அந்தச்சமயத்திலே, என் பேச்சும், பார்வையும், பாவம், அந்தவேலைக்காரிக்கு எப்படி இருந்ததோ தெரியவில்லை, "ஐயயோ! காளியாயி!" என்றுஒரே அலறல், நான்வாயை மூடப்போனேன், கூச்சல் அதிகரித்தது, அவரும், அலறி எழுந்து ஓடிவந்தார்.

(தொடரும்)



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-கெ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

## சம்பத்—சுலோச்சனா

★

"மணமகள் சுலோச்சனா, திருமணப்பதிவுப் பத்திரத்திலே கையொப்பமிடக்குனிந்துநின்றுகொண்டிருக்க, பக்கத்திலே நின்றுகொண்டு, குனியாமல் கண்களைமட்டும், கன்னிப்பருவத்துக்கு விடுதலைச்சீட்டு தரும் பத்திரத்தில் கையொப்பமிடும் துணைவியின் 'கைவண்ணத்தைக்' கவனிக்கும் விதத்தில், தம்பி சம்பத் நின்ற 'போஸ்' இருக்கிறதே, அண்ணா! அது அழகாக அமைந்திருந்தது; படம்தான் யாரும் பிடிக்கவில்லை" என்றார் நண்பர் செழியன். அவர் முகஸ்துதியிலோ, மிகைப்படுத்திப் பேசுவதிலோ, பழக்கப்பட்டவரல்ல. அவர் கூறினதை வேறு மொழியில் வேறு பலரும் கூறினர். பெண்ணும்பிள்ளையும்வெகு பொருத்தம் என்றனர். ஏன் இராது! பொருத்தம் பார்த்தது புரோகிதரல்ல. பெற்றோரும் அல்ல "கண்ணொடு கண்ணிணை" கதை அது. காதற்கலியாணம்.

15—9—46 அன்று, வடாற்காடு திருப்பத்தூரில்நடைபெற்ற தோழர் சம்பத், தோழியர் சுலோச்சனா திருமணத்திலே, முக்கியமான சிறப்பு அது. தங்கத்தில் வைரம் இழைத்தது போன்றிருந்தது அந்த 'ஜோடிப் பொருத்தம்.'

வைதிகமண மக்களின்முகத்திலே வழியுமே ஓர் 'பரிதாபம்' அதுவோ, மணமகளை அமருவோனின் முகத்திலே வழியுமே அசட்டுத்தனம் அதுவோ, அன்று அங்கு இல்லை. இருவர் கண்களிலும் ஒளி; மகிழ்ச்சி ஒளிமட்டுமல்ல அது, வெற்றி ஒளியுங்கூட.

மணமக்களின் கண்களும் கருத்தும் களிப்பால்கூத்தாடக், களித்திடும் தமது மக்களைக் கண்டு, இருபாலரின் பெற்றோர்கள் மகிழ, காட்சியைக்காண வந்திருந்த பல்லாயிர மக்களும் மகிழ்ச்சியுடன் அங்கு நடமாடினர். சடங்கு, சம்பிரதாயம் எதுவும் இல்லை, சட்டப்படி, பதிவு செய்யப்பட்டது, முன்னாள் அமைச்சர், தோழர் முத்தையமுதலியார் அவர்கள் தலைமையிலே; பெரியார் முன்னிலையில்.

அழகுக்கு அழகு செய்வது போல, மணமக்கள்கண்கவரும் ஆடை அணிந்து அமர்ந்திருந்தனர். பெரியார், தோழர்கள் சண்முகம், பெரியசாமி அண்ணாத்துரை, அ. க. தங்கவேலர் ஆகியோர் வாழ்த்துரை கூறினர். தோழர் இளம்வழுதி, திருமணத்துக்குவர இயலாமற்போனவர்கள் அனுப்பிய தந்திகளையும் கடிதங்களையும் படித்தார். மணமகளின் தந்தையார் தோழர் சாமிநாயுடு அவர்கள் நன்றி கூறினார். மாநாட்டுக்குக் கூடுவதுபோல, மக்கள் பல பாகங்களிலிருந்து மணவிழாவினைக்காணவந்திருந்தனர். திராவிடமாணவர் இயக்கத்தினைநடத்திச்செல்பவர் மணமகன். எனவே மாணவர்கள் ஏராளமாகக்கூடி இருந்தனர்.

இன்பமாளிகையில் நுழையும் இளவல் சம்பத்தும் துணைவி சுலோச்சனாவும் எல்லா நலனும் இனிது பெற்று வாழவேண்டுமென்ற நல்லெண்ணத்தை, நேரில் வந்திருந்து நல்கியவர்களின் தொகைபெரிது, ஆனால் அதனினும் பெரிது, அன்று அங்கு வரமுடியாமற் போனதால், மனதை வடாற்காடு மாவட்டம் பக்கம் செலுத்தி மணமக்களை வாழ்த்தினோரின் தொகை. பெரியார், மணமக்களை வாழ்த்திப் பேருரை ஒன்றுநிகழ்த்தி, பெண்குலத்தின் முன்னேற்றம்பற்றிப் பேசினார். நகைப்பைத்தியத்தை நங்கையருக்கு ஊட்டி அவர்களை அடிமைப்படுத்தும் ஆண் இனத்தின்போக்கையும், வெறும் அலங்காரப் பொம்மைகளாகி அடங்கிக்கிடக்க ஒருப்படும் பெண்ணினத்தின் பேதைமையையும் பெரியார்கண்டித்துப்பேசியபோது, மணமகன், மணமகளை, நோக்கியபோக்கு கருத்து மிகுந்திருந்தது. மணமகளின் அணிமணிமீது மணமகனின் குறும்புப் பார்வை சென்றது. மணமகள், மண்பொம்மையா! மணமகனை ஒரு தடவையும், பெரியாரின் கைவிரலை மற்றோர் தடவையும் பார்த்துவிட்டு, ஓர் புன்சிரிப்புடன் இருந்துவிட, மணமகன் விஷயமறிய, மணமகளின் கண் சென்று ஓர் விநாடிதங்கிமீண்ட பெரியாரின் கைவிரலைக் காண, அதிலே காணப்பட்ட விலையுயர்ந்தவசீகரமான பச்சைக்கல் மோதிரம் தென்பட, மணமகனும் புன்சிரிப்புக் கொண்ட காட்சி வெகு அற்புதமாக இருந்தது என்றார் வேறோர் நண்பர். மணவிழாவுக்கு மகுடம் சூட்டினதுபோல, மாலையிலே பொதுக்கூட்டம் நடைபெற்றது, பெரியாரும் தோழர் நெடுஞ்செழியனும் பேருரையாற்றினர். இயக்க வரலாற்றிலே, இன்பப் பகுதியிலே முக்கியமான இடம் பெறும் நாளாக அந்நாள் இருந்தது. வாழ்க மணமக்கள், வளமெல்லாம் பெற்று.

---

## திரிகோணமலையில் முஸ்லீம் லீக்

இலங்கையிலுள்ள திரிகோணமலையில் முஸ்லீம்தோழர்கள், முஸ்லீம் லீகைப்பின்பற்றி, பாகிஸ்தானை ஆதரிக்கும் முறையில் ஜனாப் S. M அபூபக்கர் அவர்களைத்தலைவராகக் கொண்டு ஓர்சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம் குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.


## தேர்தல்கள்

ஜில்லா போர்டு, முனிஸி பாலிடி முதலியஸ்தலஸ்தாபனங் கட்குத் தேர்தல்கள் சமீபத்தில் வரவிருக்கின்றன. அவைகளில் பொதுஜனங்கள் ஏமாறவேண் டியதில்லை. காங்கிரஸ் அரசாங் கத்திற்கு எதிர்க்கட்சியாக இது வரை இருந்து வந்தது. இன்று அது அரசாங்கத்தை நடத்துங் கட்சியாக இருக்கிறதென்பதை உணர்தல் வேண்டும். காங்கிரஸ் ஜனங்களின் கட்சிதான். அது நிர்வகிக்கும்படி செய்யவேண்டு மென்று ஜனங்கள் நினைப்பது நியாயந்தான். காங்கிரஸில்சேர்ந் துள்ளவர்கள் யாவரும் மகா த்மாகாந்தி அல்லது ஜவஹர்லால் அல்லஎன்பதை மறந்து விடக் கூடாது. நாட்டிலுள்ள மக்க ளின் பொது நிலைமையை ஒட் டியே காங்கிரஸிலும் மக்கள் இருக்கின்றனர். காங்கிரஸ் நலனுமெய்பராவதற்காகவோ, கதருடுப்பதற்காகவோ, பொதுக் கூட்டங்களில் பேசுவதற் காகவோ பெரிய மனிதர்க ளென்று கருதிவிடமுடியாதென் பதை உணரவேண்டும். தவிர, தேர்தலில் கால் வைத்தாலே நிலைமையில் வெகுபேர் மாறிப் போகிறார்கள். அசெம்பிளித்தேர் தலின்போக்கையும் அதற்குவரு வதற்காக ஒவ்வொருவர் செய்த முயற்சி வழிகளையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். மெம் பரான பிறகு மந்திரிசபை அமைப்பு, கமிட்டிகளின் அமை ப்பு விஷயங்களிலும் நடந்தகாரி யங்களையும் கண்டோம். பின்ன ரும் ஏற்பட்ட சபைகளைக்கவிழ்க் கச் செய்யும் முயற்சியும் எதிர்ப் பும் மறைந்துவிடவில்லை. பதவி கள் கிடைப்பதற்கு முன்புபலர் நின்ற நிலைவேறு. பதவிகிடைக் காததால் ஏற்பட்ட நிலைவேறு. எனவே தேர்தலில் கட்சியை மட்டும் பார்ப்பதில் பலனில்லை. ஏமாற்றமும் துன்பமும் அதனால் நேரக்கூடும்.

ஸ்தல ஸ்தாபனங்களின் நிர் வாக விஷயம் சமீபத்தில் நிகழ்வ தாகும். முன்பின்னுள்ள விஷ யங்களை யெண்ணி நன்மை களையோ தீமைகளையோ ஏற்படு த்த இடமில்லாதபடி செய்ய வேண்டிய தவசியமாகும். இந்த நிலையில் தனிக்கட்சி ஆட்சிநடத் துவதில் மற்றக் கட்சியாருக்கும் நன்மையும் சமாதானமும் ஏற் பட முடியாது. ஏற்படும்படி செய்து விடுவதாகச் சொல்வ தற்கும் காரணமில்லை. ஒருஸ்தா பனத்தை நிர்வகிக்க அழகான பிரசங்கிகளும் பிரசாரகர்களும் மட்டுமிருந்து விட்டால் போது மென்று சொல்ல முடியாது. நிர் வாகத்திறமையும் பொறுப்புமுள் ளவர்கள் வேண்டும். அவர்க ளோடு பொதுமுயற்சியும் தியா கமுமுள்ளவர்களும் வேண்டும். இந்த மாதிரியானவர்கள் காங்கி ரஸ் கட்சியிலிருந்து கிடைப்பின் சாலச்சிறப்பேயாகும். ஒருநண் பர்கூறியபடி "காங்கிரஸ் லேபிலை ஒட்டி ஒரு சோடா பாட்டிலை நிறுத்தினாலும் ஓட்டுபோடவேண் டியதுதான்." என்ற மூடப்பக் தியை இன்று கையாளக்கூடா தென்று தெரிவிக்கிறோம். சோடாப்பாட்டில் யாருக்கும் உதவியளிக்கலாம்; ஆனால் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திற்கு உத வாது என்பதைப் பொதுஜனங் கள் உணரவேண்டும். வருகிற காலத்தில் ஏராளமான அபிவிரு த்தி செய்யப்படவேண்டியிருக் கின்றன. தவிர யுத்தகாலம்முழு மையும் வரிகொடுத்ததாகமுடிந் ததே தவிர பலனடைந்ததாக இல்லை. இனி ஸ்தலஸ்தாபனங் களைச் சீரும் சிறப்புமாக நடத் திப் பயனடைதல் வேண்டும். கட்சியை நினைத்து ஏமாறக் கூடாதென்று எச்சரிக்கிறோம்.

ஓட்டர்கள் பொதுநல மொன் றையே கருதி மெம்பர்களைப் பொறுக்கி யெடுப்பதில் துணிய வேண்டியது அவசியம்.

(குமரன்)

---

## திராவிடர் உழைப்பாளிகள்

(ஜி. ஏ. கிரீயர்ஸன்)

"திராவிடர்கள்தான் இந்தியாவின் பழங்குடிகள்.

பொருளீட்டும் பெருமுயற்சியும் பேருழைப்பும் வாய்ந்தவர்கள் திராவி டர்களே.

தமிழர்கள் என்றால் உழைப்பாளிகள், அல்லது தொழிலாளிகள் என்றே பொருள் கொள்ளலாம். ஏனெனில், மெய்வருந்திப் பாடுபட்டுப்பொருள் தேடிவாழ்வது அவர்களுக்கே உரித் தாக இருந்துவந்திருக்கிறது.

சதுப்பு நிலங்களில் மாடுபோல் உழைக்கவேண்டுமானாலுஞ்சரி; இரங் கூன் சிங்கப்பூர் போன்ற தலைநகரங்க ளில் தெருப்பெருக்கிக் குப்பை கொட்ட வேண்டுமானாலும் சரி; மற்றும் இத்தகைய உடல் வருத்தும் வேலைகள் எவையாயினும் சரியே, அவற்றிற் கெல்லாம் ஈடு கொடுத்துப் பாடுபடுபவர்கள் திராவிடர்களே.

மெய்வருந்திப் பாடுபடுவதேதொழி லாகக் கொண்டு வந்திருந்தவர்க ளெல்லாம் திராவிடர்களே என்று எளிதிற்கூறி விடலாம்.

பெகு, பினாங்கு, சிங்கப்பூர் முத லிய கீழை நாடுகளில் காணப்படும் கலிங்கர்களிற்பெரும் பாலோர் திரா விடர்களே. மோரீசுக்கும் மேலை இந் தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென் றுள்ள கூலிமக்களிற் பெரும்பாலோர் திராவிடர்களே.

சுருங்கக்கூறின், பொருள் திரட்டும்வழி அமைந்துள்ள இடங்களிலெல்லாம் திராவிடர்களைக் காணலாம். சோம் பேறிகளாய் நகதில் அழுக்குப்படா மல் வாழ விரும்புஞ் செல்வர்கள் இருக்குமிடங்களிலெல்லாம் திராவி டர்களை அணியணியாகக் காணலாம். இஃதொன்றைக் கருதின் திராவிடர் களைக் கீழைநாட்டுக் கிரேக்கர்கள் அல்லது ஸ்காட்ச்கள் என்றுகூறலாம் போலும்!

இந்துக்கள் என்று அழைக்கப்படும் பெருந்திரளான மக்களிடையே குருட்டுநம்பிக்கைகள் மலிந்துகாணப் படும் என்றுகூறுவதுண்டு. ஆயினும், அக்குருட்டு நம்பிக்கைகள் மிகவும் குறைந்த அளவிற் காணப்படும் ஒரு பகுதியினர் அவர்களுள்ளும் இருக் கின்றனர் என்றால் அவர்கள் திராவி டர்களேயாம்.

குறிப்பு: — 'மொழி யாராய்ச்சி'' என்ற ஆங்கிலக் கட்டுரையின் தொகுப்பு.

(தமிழ்முரசு)

---

## காலம் சென்ற பழையகோட்டை பட்டக்காரர் அவர்கள் முதலாண்டு நிறைவுநாள்

பழைய கோட்டை அரண்மனை யில் காலம் சென்ற இராவ்பகதூர் நல்லதம்பிச்சர்க்கரை மன்றாடியார் அவர்கள் அடங்கிய முதலாண்டு நிறைவு நாள் இறுதிச் சடங்கு 15—9—46ல் இனிது நிறைவேறி யது. முன்னாள் வழக்கப்படி வைதிக முறையில் ஆயிரக்கணக்கான பணச் செலவுடன் அர்த்தமற்றவீண்சடங்கு களும் நடத்துவதுண்டு. இப்போது பட்டப் பெயர் வாங்கி நடத்தி வரும் பட்டக்காரரும், இளைய குமாரபட்டக்காரரும் புத்துலகவாழ்க் கைச்சீர் திருத்தங்களைக்கைக்கொண்டு முன்னர் வழக்கத்துக்கும் முரணின்றி மூடப்பழக்கங்களை ஒழித்து எவரும் பாராட்டு முறையில் இறுதிச்சடங்கு களை நடப்பித்துவைத்தார்கள். அன்று, நெருங்கிய உறவினரும் நண்பர்களும் சூழஇருந்தனர். ஏழை மக்கட்கும் உழைப்பாளிகட்கும் பசியார இனிய உணவளிக்கப்பெற்று உண்டு மகிழ்ந் தார்கள்.

### அரண்மனையில் இரவு கம்புச் சோறு.

சாகுபடி செய்வோருக்கு, சென்னை முதன்மந்திரியார் "உங்கள் அரிசி அளவைக் குறைத்துக் கொள்ளவும்" என்ற 15—9—46 அறிக்கைப்படி பட்டக்காரர் அவர்கள் அரண்மனை யில் 16—9—46 முதல் இரவுநேரம் கம்புச் சோறு திட்டத்தைத் திரு. ந. நல்ல சேனாதிபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் ஏற்படுத் தினார்கள். எல்லாருக்கும் இரவில் கம்புச்சோறே அளிக்குமாறு கட்டளை இட்டிருக்கின்றனர். புதிய விருந்தினரும் கம்புச்சோறுண்டுகளிப் புடன் சென்றனர்,

பழையகோட்டைத் தயிரும்அரண் மனைச்சாப்பாடும் உண்டு மகிழ்ந்தவர் இந்நாட்டில் பலர் உண்டு. ஆனால் காங்கயம்நாட்டுக் கம்புச் சோறும் பழையகோட்டைக் கட்டித் தயிரும் உண்டு சுவைத்த அன்பர் சிலருக்கு மட்டும் இதன் பெருமை தெரிய வரும்.


இங்ஙனம்,

P. பழனிச்சாமி.

பெத்தாம்பாளையம்.

## நமது அனுதாபம்

பன்னெடுங் காலத்துக்கு முன்ட— ஏறக்குறைய முதல்முதலாகக் காஞ்சி புரத்தில் அச்சகம் அமைத்து, பலபுத்த கங்களை வெளியிட்டு, பொதுமக் கட்கும், வியாபாரிகளுக்கும், அறிவுத் துறைக்கும் பணிபுரிந்து வந்தவரும், நற்குணங்கள் கொண்டவரும், யுனை டெட்பிரின்டிங்ஒர்க்ஸ் உரிமையாள ருமான, திரு. கே. எஸ். முருகேசநாய கர், சிலநாள் நலிவுற்றிருந்து இத்திங் கள் 25ந்தேதி காலமானார் என்ற வருத்தம்தரும்செய்தியைத்தெரிவித்து க்கொள்கிறோம். நமது 'திராவிடநாடு' இதழ், முதலில் வெளிவருவதற்கு அவருடைய உதவியும் ஒத்துழைப் பும் பெரிதும் பயன்பட்டது. அவருடைய சிறந்த குணங்களை நேரில் கண்டவர்களும் பழகியவர் களும் அறிவர். அவர் பிரிவால் வருந்தும் அவருடைய குடும்பத் தினருக்கு நமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக் கொள்கி றோம்.

திரி மார்க்

பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது

இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.


Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.